விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 13 சனிக்கிழமை (26.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 038

# இலங்கை மீதான அமெரிக்காவின் அணுகுமுறைகள் தவறானவை!

## அமெரிக்க குழுவிடம் சுட்டிக்காட்டுவேன் – கோத்தா



**இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த பின் இலங்கை தொடர்பிலான அமெரிக்காவின் அணுகுமுறைகள் தவறானது என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அத்துடன் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் சுமுகமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு இலங்கை தொடர்பான கொள்கையை அமெரிக்கா மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளருடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் படை அதிகாரிகளை அமெரிக்கா அநீதியான முறையில் நடத்துவது தவறானது என்று நான் கூற விரும்புகிறேன்.

அமெரிக்காவின் இராஜதந்திரிகளும் அதிகாரிகளும் என்னைச் சந்திக்கும்போது தமது படைத்தரப்புடனான உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள்.

அமெரிக்க படைத்தரப்பினர் எமது நாட்டின் வசதிகளை பயன்படுத்திக் கொள்வதற்கான ஒப்பந்தமொன்று நான்காவது கட்ட ஈழப்போரின்போது செய்து கொள்ளப்பட்டது.

இதனடிப்படையிலே இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் நில அதிர்வு

நீண்ட நாட்களுக்குப் பின் அம்பாறையில் நேற்றுக் காலை நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

அம்பாறை வட்டினாகல பகுதியில் மூன்று நில அதிர்வுகள் உணரப்பட்டதாக பூகோள மற்றும் அகழ்வாராய்ச்சி அலுவலகத்தின் தலைவர் எம்.பி.விஜயானந்த தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் அம்பாறை வட்டினாகல, தேவாலஹித, தமன ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக நில அதிர்வு உணரப்பட்டது.

நில அதிர்வுக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படாமைக்கு இயந்திர தொழில்நுட்பக் கோளாறு மற்றும் தொழில்நுட்ப வள வசதியின்மை காரணம் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (செ –11)

## பாம்பு மழை!

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேசத்தின் சில பகுதிகளில் நேற்று வெள்ளிக்கிழமை காலை பாம்பு மழை பெய்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

காத்தான்குடி 6ம் குறிச்சி அமானுல்லா வீதி, காத்தான்குடி ஜன்னத் மாவத்தை ஆகிய பகுதிகளிலேயே இப்பாம்பு மழை பெய்துள்ளது.

காத்தான்குடி அமானுல்லா வீதியிலுள்ள வீட்டு வளாகமொன்றிலும் ஜன்னத் மாவத்தையிலுள்ள வீட்டு வளாகமொன்றிலுமே இப் பாம்பு மழை பெய்துள்ளது.

தான் வளாகத் (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க இராஜதந்திரிகள் இன்று கொழும்பு விஜயம்

அமெரிக்க ராஜதந்திரிகள் இன்றைய தினம் கொழும்புக்கு விஜயம் செய்ய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பின்னர் அவர்கள் மாலைதீவிற்கும் விஜயம் உள்ளனர்.

அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர்களான ஜேம்ஸ் மூர், ஜேம் ஸிம்பூர்மன் மற்றும் துணை பாதுகாப்புச் செயலாளர் விக்ரம் சிங் ஆகியோர் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்களது சந்திப்புக்களில், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் உயர்மட்ட ராஜதந்திரிகள் மற்றும் முக்கியஸ்தர்களை அமெரிக்க ராஜதந்திரிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை ஏற்கெனவே திட்டமிட்டதன் அடிப்படையில் அமெரிக்க ராஜதந்திரிகள் கொழும்பு விஜயம் செய்வதாக வெளிவிவகார அமைச்சு (20ஆம் பக்கம் பார்க்க)

## சல்மான்–சந்திரிகா டில்லியில் பேச்சு

(புதுடில்லி)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து பேசியுள்ளார்.

இச்சந்திப்பு கடந்த புதன்கிழமை புதுடில்லியில் இடம்பெற்றுள்ளது.

சந்திரிகாவுடனான சந்திப்பின்போது, பல்வேறு இருதரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, (20ஆம் பக்கம் பார்க்க)

## அரச இணையங்கள் மீதான அதிரடி தாக்குதல்கள் தீவிரம்

(கொழும்பு)

இலங்கையின் உள்ளக தகவல்களை சூறையாடும் மறைமுகப்போர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. இலங்கையின் அரச இணையத்தளங்களை ஒவ்வொன்றாக குறிவைத்து செயலிழக்கச் செய்யும் இணையவழி தாக்குதல்கள் தீவிரமடைந்து வருகின்றன.

கடந்த சில தினங்களாக அரசின் பாதுகாப்பு, பொருளாதார முக்கியத்துவம் மிக்க இணையத்தளங்கள் முடக்கப்பட்டு வந்த நிலையில், இலங்கையின் முதலீட்டுச் சபையின் இணையத்தளம் ஒன்று நேற்று முடக்கப்பட்டுள்ளது.

இலங்கை முதலீட்டுச்சபை இணையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த இரண்டாயிரத்திற்கும் அதிகமான முதலீட்டாளர்கள் விபரம் மற்றும் ஏனைய முக்கிய ஆவணங்கள், உள்ளிட்ட அனைத்துமே ஊடுருவல்காரரால் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

ரவி ஜோன்ஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் மூழ்கி இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்ற இளைஞர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மு.ப 11.00 மணியளவில் யாழ்ப்பாணம் நாவாந்துறையில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த மயில்வாகனம் டிலக்ஷன் (வயது22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, தனது நண்பர்கள் ஐவருடன் படகு ஒன்றில் நாவாந்துறை கடலுக்கு குளிக்கச் சென்றுள்ளனர்.

எனினும் 15 அடி (20ஆம் பக்கம் பார்க்க)

## கழிவு எண்ணெய் தாக்குதலை இனி நடத்த விட மாட்டோம்!

### எரிக் பெரேரா உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழில் இனிவரும் காலங்களில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளில் கழிவு எண்ணெய் வீச்சு உட்பட எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறாது.

ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் எமக்கு முன்னறிவித்தல் வழங்கப்பட்டால் அதற்கு பொலிஸாரின் பாதுகாப்பு வழங்கப்படும்.

அதனை விடுத்து பொலிஸாருக்கு எவ்வித முன்னறிவித்தலும் வழங்கப்படாமல் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று, அதில் அசம்பாவிதங்கள் நிகழ்ந்தால், அதற்கு பொலிஸார் ஒன்றும் செய்ய முடியாது என யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கே.ஈ.எல்.பெரேரா தெரிவித்தார்.

அண்மையில் சமவுரிமை இயக்கத்தினரால் பல்கலை மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தியும், வடக்கில் இடம்பெறும் இராணுவ ஆட்சியை உடன் நிறுத்தக்கோரியும், அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தியும் யாழ்.நகரில் (20ஆம் பக்கம் பார்க்க)

## ரிசானா வாழ்ந்த குடிசையை உடைக்க வேண்டாம் – தாயார்

### நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது

(மூதூர்)

மூதூர் சாபி நகரில் ரிசானா நபீக்கின் பெற்றோருக்கு வீடொன்றை கட்டிக் கொடுப்பதற்கான அடிக்கல் நேற்று வெள்ளிக்கிழமை நாட்டப்பட்டது.

இராணுவத்தின் 22-வது படையணியின் பிரிகேடியர் அருண வன்னியாராய்ச்சி தலைமையிலேயே இந்த அடிக்கல் நாட்டப்பட்டது.

வீட்டு நிர்மாணங்களுக்கு பொறுப்பாக இராணுவத்தின் 224ஆவது படையணி தலைமை அலுவலகத்தின் கேணல் விக்கும் லியனகே செயற்படுவார்.

ரிசானாவின் தாயாரான அஹமது செய்யது பரீனா மற்றும் தந்தை மொஹமது சுல்தான் நபீக் ஆகியோரே அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

சவுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட தனது மகளான ரிசானா (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சாப்பிட மட்டுமே வாய் திறக்கிறேன் - மேர்வின்



(கொழும்பு)

சாப்பிட மட்டுமே தான் வாய்திறப்பதாக பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். ஜே.வி.பி. கிளர்ச்சி நிலவிய 1988-1989 காலப்பகுதியில் பொது மக்கள் கூட்டங்கள் தடை செய்யப்பட்டிருந்தன.

அந்தக் காலத்தில் திஸ்ஸ மஹாராம பிரதேசத்தில் கூட்டமொன்றை ஒழுங்கு செய்தமைக்காக மூன்று சகோதரர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன.

இவ்வாறான நெருக்கடியான காலங்களில் சாப்பிட மட்டுமே வாய்திறக்க வேண்டும் என திஸ்ஸ மஹாராம விகாரையின் விகாராதிபதி ஹக்மன பஞ்ஞாலோக தேரர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

எனவே எந்தவொரு ஊடகத்திடமோ தனிநபர்களிடமோ பேசுவதற்கு விரும்பவில்லை சாப்பிட மட்டுமே இப்போது வாய்திறக்கிறேன் என மேர்வின் சில்வா வாய்திறந்து தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகம்ஒன்றுக்குஅளித்தநேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மண்டைதீவு சிறுமி கொலை சந்தேகத்தில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சிறுமி கொலை சம்மந்தமாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் கே.ஈ.எல்.பெரேரா தெரிவித்தார்.

இவர்கள் இருவருடைய மரபணுக்கள் கொழும்புக்கு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தில் குணசேகரம் சுடரினி என்ற 4 வயது பாலகி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இச் சிறுமியின் கொலை தொடர்பிலேயே இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் குறித்த சிறுமியின் கொலை தொடர்பில் புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். (செ-4)


**காணி விற்பனைக்குண்டு**

அச்சுவேலி, ராசவீதி,
கைத்தொழில் பேட்டைச்
சந்தியில் 10 பரப்பு தோட்ட காணி
வீடு (கட்டக்கூடிய)
விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0775802301

(1503)





## ஒன்றுகூடல்

(மானிப்பாய்)

மாதகல் நுணசை மகாவித்தியாலய பழைய மாணவர்கள் பெற்றோர்களுக்கிடையிலான ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் தேவைகள் குறித்தும் அபிவிருத்திகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-3,23)

## ஆட்டோ பதிவு

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட வாடகை சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் யாவும் பச்சிலைப்பள்ளி முச்சக்கர வண்டி சங்கத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு பச்சிலைப்பள்ளி முச்சக்கர வண்டி சங்க நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதன்படி பளை நகரம், புதுக்காடு, இயக்கச்சி, முகமாலை, கிளாலி, இத்தாவில் ஆகிய பிரதேசங்களில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறும் பதிவு செய்பவர்கள் முச்சக்கரவண்டிச் சங்கம், பளை நகரம், பளை என்ற முகவரியில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9,5)


**விற்பனையாளர் தேவை**

பிடவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண்கள், பெண்கள் தொடர்பு கொள்ளவும்.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்
41, பெரியகடை யாழ்ப்பாணம்.

(1584)



**பொதுக்கூட்டம்**

யாழ் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 52ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் தலைவர் செ.பேரின்பநாதன் அவர்கள் தலைமையில் 27.01.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ சிகிச்சை மண்டபத்தில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சி.விக்கினேஸ்வரன்
செயலாளர்

(1580)



**பிள்ளையார் இன்**

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

25% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-1660)


## தைப்பூசப் பொங்கலும் உழவர் தினமும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்புநிலையதைப் பூசபொங்கல் மற்றும் உழவர்தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நிலையத்தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நிலைய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர்களது கலைநிகழ்வுகளும்நடை பெறவுள்ளதால்சகலரையும் கலந்து சிறப்பிக்குமாறு நிலைய ஸ்தாபகர் [illegible] அறிவித்துள்ளனர். (செ-3,29)

# தமிழ்-முஸ்லிம் மக்களுக்காக பொலிஸ் அத்தியட்சகர் அழுகை

## இன ஒற்றுமையை வலியுறுத்தினார்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலத்திற்கு பின்பு ஏற்பட்டுள்ள சமாதான சூழல் இனங்களுக்கிடையில் ஒற்றுமையைக்கட்டி எழுப்ப சந்தர்ப்பமாக அமைந்துள்ளது என தெரிவித்த யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட் ஜெப்ரி யாழ்.குடாநாட்டிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட துன்பகரமான சம்பவத்தை நினைக்கும் போது மனவருத்தமாக உள்ளது என தெரிவித்து கண்ணீர் விட்டார்.

பிளஸ் ஹாஜியார் பவுண்டேசன் யாழ்.மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்துடன் இணைந்து நடத்திய சிஜிறி 1434 முஹர்ரம் ஸ்லாமிய போட்டியின் பரிசளிப்புவிழா நேற்று மாலை யாழ்.ஒஸ்மானிய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்தகாலங்களில் இடம்பெற்ற இனங்களுக்கிடையிலான முரண்பாடு மீண்டும் இந்த நாட்டில் ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் இடம் பெயர்வதற்கு முன்பு எவ்வாறு ஒற்றுமையாக இருந்தார்களோ அதேபோன்று ஒற்றுமையாக வாழவேண்டும் என கண்ணீர் விட்டு அழுதபடி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பொலிஸ் அத்தியட்சகர் உரையாற்றியதைவிட, அழுததே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## புதிய நிர்வாக தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது. இதன் தலைவராக மீண்டும் கெமுனு விஜயரட்ண அவர்களும் உப தலைவராக யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணைய தலைவர் பொ.கெங்காதரன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (செ)

# மின்சார சபையின் செலவினங்கள் 268 பில்லியன் ரூபாயாக மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் 2013ஆம் ஆண்டுக்கான செலவினங்கள் 268 பில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது என்று இலங்கை பொது பயன்பாட்டுக்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

அதிகரித்துச் செல்லும் மின்சார தேவையினால் ஏற்படும் மேலதிக செலவுகளான மின்பிறப்பாக்கம், மின் கடத்துகை, மின் விநியோக செலவுகள் மற்றும் மின் வழங்களுடன் சம்பந்தப்பட்ட ஏனைய செலவுகள் இந்த மதிப்பீட்டுசெலவீனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட செலவீனங்கள் தொடர்பில் ஆராய்ந்து தற்போதுள்ள மின்பட்டியல் கட்டணங்கள் மதிப்பிடப்பட்ட செலவீனத்தினை மீட்டெடுக்க போதுமானதாக காணப்படாத விடத்து ஆணைக்குழுவானது மின்பட்டியல் கட்டணங்களை அதிகரிப்பதனை கருத்திற் கொள்ளும் அல்லது அரசாங்கத்திடமிருந்து மேலதிக மானியங்களை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஜயதிஸ்ஸ த கொஸ்தா தெரிவித்துள்ளார். (செ-8)


# நயினையில் தைப்பூச விழா



**நாகம்மாளை நாடி வரும் அடியவர்க்கு அமுத சுரபியில் சிறப்பு அன்னதானம்**

**தைப்பூச நன்னாள் 27.01.2013 ஞாயிற்றுக்கிழமை**

அனைவரும் வருக!
அம்பிகையின் அருளைப் பெறுக!!
அமுதசுரபியில் அமுதமுண்டு மகிழ்க!!!

அடியார்கள் தங்குவதற்கு அன்னபூரணி இறை பயணிகள் இல்லம் அமைக்கப்பட்டுள்ளதென்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

பிரதானசாலை, நயினாதீவு -2.
தொ.பே: 021321 3575

நிர்வாகம், ஸ்ரீநாக பூஷணி அமுதசுரபி,
அன்னதான சபை

(சி-2239)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அகத் தூய்மை

''எப்போதும் தூய்மையாக இருப்பது தான் நல்லது'' என்று ஒருவர் சொன்னார்.

''நான் அப்படித்தான் சேர் இருக்கிறேன்! தினமும் மூன்று வேளை சோப்பு போட்டு குளிக்கிறேன்'' என்றார் இன்னொருவர்.

''உடல் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது சேர்! மனமும் நலமாக இருக்க வேண்டும்'' என்றார்.

''மனதை சுத்தப்படுத்துவதற்கு என்ன சோப் போட லாம்?'' என்று கேட்டார் இவர்.

''ஆன்மீகம்'' என்ற சோப்தான் அதற்கு பொருத்த மானது. ஆன்மாவை மேம்படுத்துவதற்கு ஒரு முயற்சி தான் ஆன்மீகம்.

அந்த முயற்சியை அடைய என்ன செய்ய வேண்டும்?

மனதினுள் அடைந்து கிடக்கும் வேண்டாத விருந்தா ளிகளை வெளியேற்ற வேண்டும். முக்கியமாக ''பொறாமை'' என்றவரை அதிரடியாக வெளியேற்ற வேண்டும்.

இவர் நமது மனதினுள் குடியிருக்கும் வரைக்கும் நிம்மதியாக இருக்க முடியாது.

ஒரு குருநாதர் இருந்தார்; அவரிடம் இரு சீடர்கள் இருந்தார்கள். இந்த இருவரும் ஆரம்பத்தில் ஒருவருக் கொருவர் நல்ல முறையில்தான் பழகிக் கொண்டிருந் தார்கள்.

காலம் கடந்த நிலையில் இந்த இருவரில் ஒருவரது மனதினுள் ''பொறாமை'' என்ற விருந்தாளி அமர்ந்து கொண்டது.

குருநாதரிடம் தான் நல்ல பெயர் பெற வேண்டும்; தன் நண்பன் கெட்ட பெயர் கேட்க வேண்டும் என்றொரு நப்பாசை ஏற்பட்டது.

என்ன செய்யலாமென யோசித்தான்?

ஒருநாள் விடியற் காலையிலே எழுந்து நேராக குரு விடம் சென்று, அவர் முன்னால் நின்று, ''குருவே! என்னைப் பாருங்கள். நான் எவ்வளவு விரைவாக எழுந்து குளித்து, உங்களது வணக்கத்திற்காக காத்து நிற்கிறேன். ஆனால், இவனோ இன்னமும் கண் விழி க்க வில்லை. தூங்கிக் கொண்டே விடியாமுகத்துடன் இருக்கிறான்'' என்று கூறினான்.

குருநாதர் நிமிர்ந்து பார்த்து விட்டு கூறினார்.

''அப்படியா?'' அப்படியென்றால் நீயும் அவனை மாதிரியே தூங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே'' என மிகவும் பொறுமையாகச் சொன்னார்.

''என்ன இது– நான் எவ்வளவு தீவிரமான ஒரு விடயத்தை சொல்கிறேன். நமது குருநாதர் மிகவும் பொறுமையாக இப்படிச் சொல்கிறாரே'' என்று மனதி னுள் நினைத்தான்.

ஆச்சரியமாக அவரைப் பார்த்தான். அதற்கு குரு நாதர் ''ஆமாமப்பா... நீயும் தூங்கிக் கொண்டு இருந்தி ருந்தால், மற்றவர்களைப் பற்றி குறை சொல்வதற்கு இங்கே முன் வந்திருக்கமாட்டாய். அதனால்தான் அப்ப டிச் சொன்னேன்?'' என்று கூறினார்.

சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அப்போதுதான் அர்த்தம் புரிந்தது.

''பொறாமை'' என்ற விருந்தாளியை மனதிலே இருந்து விரட்டியடித்தான். இப்போது தனது மனம் சுத்தமாக இருப்பதை உணர்ந்து கொண்டான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தமிழ் மக்கள் ஆணை தந்தது கூட்டமைப்பை பலப்படுத்தத்தான்!

## தமிழரசுக்கட்சி கிளைகளைத் திறக்கவல்ல– சிவசக்தி ஆனந்தன்

கடந்த தேர்தல்களில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண் டும் என்பதற்காக தமிழ் மக்கள் வாக்க ளித்தார்களே தவிர தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்துவதற்காக அல்ல எனத் தெரி வித்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழர சுக் கட்சியின் கிளைகளைத் திறப்பதன் மூலமாக கூட்டமைப்பைப் பலப்படுத்தப் போவதாக சம்பந்தன் ஐயா தெரிவித்திரு ப்பது கூட்டமைப்பை மேலும் பலவீன ப்படுத்தும் ஒரு செயலாகவே இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் தமிழரசுக் கட்சி யின்புதிய கிளை ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தமிழ்த்தேசியக் கூட்டமை ப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் கிளைகளை நிறுவுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவ தற்கே எனத் தெரிவித்திருந்தார். இது நியா யப்படுத்த முடியாத தமிழர்களை ஏமாற் றும் ஒரு முயற்சி எனக்குறிப்பிடும் சிவ சக்தி ஆனந்தன் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உரு வாக்கப்பட்டு இன்று பத்து வருடங்களு க்கு மேல் சென்று விட்டபோதிலும் அத னைப் பதிவு செய்ய வேண்டும். அதற்கான கட்டமைப்புக்களை உருவாக்க வேண் டும் என்பதில் தமிழரசுக் கட்சியினர் ஒரு போதுமே அக்கறை காட்டியதில்லை. இன்று தமிழர்களின் பிரதான கட்சியாக சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அமைப்பாக கூட்டமைப்பு இருக்கி ன்ற போதிலும் அது பதிவு செய்யவோ அல்லது உரிய கட்டமைப்புக்களைக் கொண்ட ஒரு கட்சியாகவோ இல்லை.

தமிழரசுக்கட்சியைப் பொறுத்த வரையில் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கும் சர் வதேசத்தின் முன்பாகக் காட்டிக் கொள்வத ற்கும் மட்டும்தான் தமிழ்த் தேசியக்கூட் டமைப்பு தேவையாகவுள்ளது. ஆனால், கூட்டமை ப்பு என்ற கவசத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழரசுக்கட்சியை வளர்ப்பதுதான் சம்ப ந்தனினதும் தமிழரசுக் கட்சியினதும் நோக் கமாக இருந்துள்ளது. இதனால்தான் மக் கள் சக்தியுடன் கூடிய ஒரு அமைப்பாக தமி ழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்டியெ ழுப்ப அவர்கள் முன்வரவில்லை.

1976 இல் பிரதான தமிழ்க் கட்சிகள் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்ட ணியை உருவாக்கிய போது அதற்குத் தலைமைப் பொறுப்பை ஏற்ற தந்தை செல்வா நடந்து கொண்ட முறையை சம் பந்தன் ஐயா கவனிக்க வேண்டும். தமி ழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்ட பின்னர் அதற்கான கிளைகள் தான் அமைக் கப்பட்டனவே தவிர தமிழரசுக் கட்சியின் கிளைகளை அமைக்க வேண்டும், தமிழ ரசுக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என் பதில் தந்தை செல்வா அக்கறை காட்டவி ல்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பலப்படுத்துவதிலேயே அவர் அக்கறை காட்டினார்.

ஆனால், தந்தை செல்வா வின் பாதையில் செல்வதாகக் கூறிக் கொள்ளும் சம்பந்தன் ஐயா ஐந்து அமைப்புக்கள் இணைந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக் கட்சி கிளைகளை அமைப்பதும் அங்கத்தவர்க ளைச் சேர்ப்பதும் கூட்டமைப் பைப் பலப்படுத்தத்தான் எனக் கூறுவது யாரை ஏமாற்றுவத ற்கு? இதேபோல கூட்டமைப்பி லுள்ள ஒவ்வொரு கட்சியும் செயற்பட முற்பட்டால் கூட்ட மைப்புக்குள் ஐக்கியத்தை எவ் வாறு உருவாக்க முடியும் என் பதற்கு சம்பந்தன் ஐயாதான் பதில் சொல்ல வேண்டும். இவ் வாறான ஒரு நிலை உருவா னால் குழு மோதல்களும் குழு வாதங்களும்தான் மேலோ ங்குமே தவிர தமிழர்களுடைய நலன்களுக்கான ஐக்கியப் பட்ட ஒரு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியாது என் பதே எமது கருத்தாகும்.

30 வருடகாலப் போரி னால் நொந்து போய் அரசின் ஆக்கிரமிப்புக்குள் என்ன செய் வது எனத் தெரியாது நம்பிக் கையிழந்தவர்களாகவுள்ள தமிழர்களுக்கு எந்த வகையி லும் நம்பிக்கையைக் கொடுப் பதாக சம்பந்தன் ஐயாவின் இந்த அறிவிப்பு இல்லை என் பதை திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

இந்தக் கட்டத்திலாவது மக் களுக்கு கொஞ்சமாவது நம்பி க்கை கொடுக்கும் வகையில் செயற்படுவதற்கு சம்பந்தன் ஐயா முற்பட்டால் நேரடியா கவே கூட்டமைப்பை பலப் படுத்தும் செயற்பாட்டை முன் னெடுக்க வேண்டும்.

தமிழரசுக்கட்சிக் கிளைகளை அமை ப்பதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைப் பலப்படுத்துகின்றோம் எனக் கூறி இனியும் மக்களை ஏமாற்ற வேண் டாம் என சம்பந்தன் ஐயாவைத் தய வாகக் கேட்டுக்கொள்கின்றோம் இவ்வாறு சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின் றார். (செ–11)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 280 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-120 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 200 | 240 |
| தக்காளி | 100 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 160 | 120 | 140 | 160 |
| பூசணி | 40 | 30 | 50 | 50 |
| புடோல் | 100 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 170 | 190 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 250 | 250 | 240 | 160 |
| லீக்ஸ் | 140 | 110 | 160 | 160 |
| பீற்றூட் | 120 | 110 | 120 | 120 |
| கறிமிளகாய் | 300 | 290 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 600 | -- | -- |
| போஞ்சி | 140 | 160 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 200 | 240 | 200 | -- |
| கீரை – 1 பிடி | 30-40 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 20-40 | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 50 | 35-40 |
| இராசவள்ளி | 90-110 | 90 | 120 | 130 |
| வெங்காயப்பூ | 160 | 240 | 80 | 100 |

## இராசி பலன்

*26.01.2013*
*(தை 13, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*
*சதுர்த்தசி முற்பகல் 9.40 மணிவரை*
*புனர்பூசம் பிற்பகல் 3.36 மணிவரை*
*இராகுகாலம் 9.36-11.06 மணிவரை*
*சுபநேரம் 3.36-5.06 மணிவரை*
*பூரணை விரதம்,*
*துருத்து முழுநோன்மதி தினம்*

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்விக்காக எடுத்த முயற்சி கை கூடும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விலையுய ர்ந்த பொருட்கள் வாங்கும் எண் ணம் உருவாகும்.

**இடபம்** செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, உடன் பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், விருப் பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், மனச்ச ஞ்சலங்கள் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவீர்கள்.

**சிங்கம்** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும், திடீர் பயணமொன்று உருவாகும், எடுத்த காரியங்களில் சில தாமத ங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், பொருளாதார நிலை உயர்வடை யும், உறவினர் வருகையால் குடும் பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**துலாம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரும் நாள், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படும் நாள், சுற்றத்தார் வருகையுண்டு, தொழில் சம்பந்தமாக புதிய முடிவுகள் எடுப் பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயமுண்டு.

**தனுசு** தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், அலைச்சல்கள் சற்றுக்கூடும், கவ லைகள் தீர கற்பக மூர்த்தியை வழி பட வேண்டிய நாள், உங்கள் செயற் பாடுகளில் பிறர் குறைகண்டு கூறலாம்.

**மகரம்** நட்புக்கள் அதிகரிக்கும், சென்ற இடத்தில் சிறப்படைவீர்கள், பொரு ளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் அந்நி யோன்னியம் அதிகரிக்கும்.

**கும்பம்** தேகாரோக்கியம் சீராகும், குடும்ப த்தில் ஏற்பட்ட கருத்து முரண்பா டுகள் அகலும், பெண்வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், கடன் பிரச்சினைகளைச் சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள்.

**மீனம்** வியாபார விருத்தியுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரி கும், பிள்ளைகளால் பெருமை காண்பீர்கள், ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் வருகைக்காக காத்திருக்கும் யாழ்.போதனாவின் கட்டடம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மஹிந்தவின் வருகைக்காக தனது செயற்பாடுகளை ஆரம்பிக்காது யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடம் முடங்கிக் கிடப்பதாக சிலர் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதியன்று குறித்த கட்டடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திற ந்து வைக்கப்படும் என கூறப்பட்டது.

எனினும் காலநிலை சீர்கேடு எனக் கார ணம் கூறப்பட்டு கட்டடத்தின் திறப்புவிழா கால எல்லையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த கட்டடம் எப்போது நோயாளர்களின் பாவனைக்கு விடப்படு மென கேள்வியெழுப்பப்படுகின்றது.


இக்கட்டடத்தின் திறப்பு விழா வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகியும் ஜனாதிபதியின் வருகைக்காக தவம் கிடக்கின்றது குறித்த கட்டடம்.

இது தொடர்பில் யாழ்.போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீபவானந்தராஜாவிடம் கேட்டபோது,

குறித்த கட்டடத்தின் வேலைகள் அனைத் தும் முழுமையாக பூர்த்தியடைந்துள்ளன.

சுகாதார அமைச்சிலிருந்து எமக்கு பதில் கிடைக்கும் வரையில் நாம் அக்கட்டடத்தில் செயற்பாடுகளினை ஆரம்பிக்க முடியாது.

ஜனாதிபதியின் வருகைக்காகவே குறித்த கட்டடம் காத்திருக்கின்றது என்றார் அவர். (2-4)



நன்றி:- மிரர்

# வெளியேறும் கைதிகள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்!

## கவனமெடுக்கின்றனர் யாழ்.பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெறும் வீடு உடைத்து மேற்கொள்ளப்படும் சம்பவங்கள் நீதிமன் றங்களினால் தண்டனை வழங்கப்பட்டு தண்டனைக்காலம் முடிவடைந்து வெளியே வருபவர்களால்தான் மேற்கொள்ளப்படு கின்றது என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.ஈ.எல்.பெரேர தெரிவித்தார்.

இவ்வாறு நீதிமன்றங்களினால் தண் டனை வழங்கப்பட்டு விடுதலை பெற்று மீண் டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தொடர் பில் விசாரணை மேற்கொள்ள விசேட பொலிஸ் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரத்தில் இவ்வாறு நீதிமன்றினால் தண்டனை வழங்கப்பட்டு தண்டனையை அனுபவித்து சிறையிலிருந்து வெளியேறிய பின்னர் இரு திருட்டுக்கள் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஊர்காவற்றுறை மற்றும் எழுவைதீவு ஆகிய இடங்களில் கடந்த 23, 24 ஆம் திகதி களில் மேற்கொள்ளப்பட்ட திருட்டுக்களே அவையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மாதங்களில் கொள்ளைச் சம்ப வங்கள் அதிகரித்து இருப்பதாகவும் கூறப் பட்டுள்ளது.

எனினும் முன்னைய காலங்களை விட தற்போது குறைவடைந்துள்ளது எனலாம்.

எனினும் தற்போது ஆங்காங்கே இடம் பெறும் கொள்ளைச் சம்பவங்கள் நீதிமன்றி னால் தண்டனை வழங்கப்பட்டு விடுவிக்கப் படுவர்களிடையே மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத் துள்ளன.

அது தொடர்பில் நாம் விரைவில் நடவ டிக்கை எடுப்போம் என அவர் கூறினார். (செ-4)

# கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன!

(பண்டத்தரிப்பு)

ஏசியா கப்பிற்றல் நிறுவனத்தினால் சங்கானை பிரதேச செயலகத்திற்கு உட் பட்ட 49 மாணவர்களுக்கு கற்றல் உபகர ணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 25 கிராம சேவையாளர் பிரிவுக ளிலும் வன்னியிலிருந்து மீள் குடியமர் ந்த பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கே இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட் டுள்ளன. சிறுவர் உரிமை மேம்பாட்டு உத் தியோகத்தரால் இக்கற்றல் உபகரணங் கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-3-30)

# கடந்த வாரம் யாழில் 79 பேர் கைது -எரிக்பெரேரா

(யாழ்ப்பாணம்)

யாழில் குற்றச் செயலில் ஈடுபட்ட 79 பேர் கடந்த வாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.ஈ.எல்.பெரேரா தெரிவித்தார்.

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப் பிக்கப்பட்ட 22 பேரும் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 17 பேரும் சட்டவிரோதமாக பொது இடத்தில் மது அருந்திய 14 பேரும் சூழல் மாச டையும் வகையில் செயற்பட்ட அல்லது டெங்கு நுளம்பு பெருகும் வகையில் வீட்டுச் சூழலினை வைத்திருந்த 10 பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 6 பேரும் வீதியால் செல்வோருக்கு மது அருந்திவிட்டு இடையூறு விளைவித்த 4 பேரும் கடலாமை பிடித்த ஒரு வருமாக மொத்தம் 79 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக எரிக் பெரேரா தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் நீதிமன்றங்க ளின் முன்னிலையில் முற்படுத்தப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார். (செ-4)

# முன்பள்ளிகளுக்கான பால் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலு வூட்டல் அமைச்சின் கீழ் முன்பள்ளிக ளுக்கான பால் விநியோகம் இவ்வாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பால் விநியோகம் சங்கானை பிர தேசத்திற்கு உட்பட்ட 55 முன்பள்ளிகளு க்கே நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையா டலில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த 2012 ஆம் ஆண்டு சுற்று நிரு பத்திற்கு ஏற்ப இவ்வாண்டும் இப்பால் விநியோகம் நடைமுறைப்படுத்தப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (செ-3-30)

# சிறுமியை துஷ்பிரயோகித்த சிறியதந்தை கைதானார்

(யாழ்ப்பாணம்)

தனது உறவுமுறைச் சிறுமியை நீண்ட நாட்களாக பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி வந்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள பிரதேசமொன்றில் குறித்த 14 வயதுடைய பாடசாலைச் சிறுமி யினை அச்சிறுமியின் சிறியதந்தை நீண்ட நாட்களாக வன்புணர்வுக்குட்படுத்தி வந்துள்ளார்.

சிறுமி தான் இவ்வாறு தனது சிறிய தந்தை யினால் துன்புறுத்தப்படுவது குறித்து வெளி யில் சொல்லாமலிருக்க அச்சிறுமியினை அவர் அச்சுறுத்தி வந்துள்ளார்.

எனினும் சிறுமி குறித்த துன்புறுத்த லினை தாங்க முடியாது இது தொடர்பில் தனது பெற்றோர்களிடம் கூறியுள்ளார்.

இதனையடுத்து பெற்றோர் பொலிஸிடம் முறையிட்டுள்ளனர். அதன்பின்னர் கிளிநொச்சி வட்டக்கச்சியை சேர்ந்த குறித்த கொடூர சிறியதந்தையினை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளதாக யாழ்.மாவட்டப் பிரிவு பொலிஸ்மா அதிபர் உறுதிப்படுத்தினார். (செ-4)

# இந்தியாவின் 63ஆவது குடியரசு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 63 ஆவது குடியரசு தின நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்ப கல் 9 மணிக்கு நல்லூர் மருதடி வீதியில மைந்துள்ள இந்திய துணைத்தூதரகத் தில் நடைபெறும்.

இன்று முற்பகல் 9 மணிக்கு இந்திய தேசிய கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்விற்கு இந்திய பிரஜைகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டு ள்ளது. (செ-9)

# கவிதைகள் தொகுப்பு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஜெ.உமாசுதனின் குருகு கவிதைகள் தொகுப் பின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பண்டத்த ரிப்பு இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் யாழ்ப்பாணம் பாடசாலை வைத்திய அதிகாரி டாக்டர் வை.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ் வரன் கலந்து கொள்ளவுள்ளார். இதில் வாழ்த்துரை களை தமிழ் ஆசிரியர்களான தமிழ்மணி க.சின்னத்தம்பி, கோ.வாமதேவன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நூல் அறிமுக உரையை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு இயக்குநர் அ.குமா ரவேல், வெளியீட்டுரையை செஞ்சொற் செல் வர் கலாநிதி ஆறு.திருமுருகன், ஆய்வுரை களை கீரிமலை நகுலேஸ்வராக் கல்லூரி அதிபர் கவிஞர் இயல்வாணன், சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.குகபரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை ப.சிவகுமார் பெற் றுக் கொள்வார். நூலில் கவிஞர் ஜெ.உமாசுத னின் ஆக்கங்கள் இருபத்தியெட்டுத் தலைப் புக்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (செ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருபூசை

(யாழ்ப்பாணம்)

கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரம குரு பூசை இன்று சனிக்கிழமை மாதாஜி லிங் கேஸ்வரர் ஆலயத்தில் ஆலய தலைவர் இ.குழந்தை வடிவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அதிகாலை 5 மணிக்கு திருவாசக முற்றோதலும் தொடர்ந்து 9.30 மணிக்கு விசேட அபிஷேக பூசை யும் நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு அஷ்டலக்சுமி நிறுவுனர் அமரர் குலபதி ஆறுமுகம் கந்தையா ஞாபகார்த்தமாக பாடசாலைகளில் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் சிறந்த பெறுபேறு பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங் கப்படும்.

இதில் கௌரவ விருந்தினர்களாக வைத்தியர் வ.சின்னப்பு, செலான் வங்கி முகாமையாளர் ச.சந்திரகுமார், அஷ்ட லக்சுமி பதிப்பக அதிபர் செ.முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையினை சிவஸ்ரீ யோ.குரு சாமிக்குருக்கள் ஆற்றவுள்ளார். (செ-9-5)

# நயினாதீவில் தைப்பூச விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த தைப்பூச விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற வுள்ளது.

அன்றையதினம் முற்பகல் 11 மணி க்கு விசேட அபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு உச்சிக்காலப்பூசையும் நடை பெற்று தொடர்ந்து விசேட வசந்த மண் டபப் பூசையும் திருமஞ்சத்தில் அம்பாள் வீதியுலா வருதலும் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு அடியார்களின் நலன்கருதி விசேட யாழ்-குறிகாட்டு வான் போக்குவரத்து சேவையும் ஒழு ங்கு செய்யப்பட்டுள்ளதாக நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நிர் வாக செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தைப்பூச திருவிழா அன்று அமுதசுரபி அன்னதான சபையினரின் அன்னம் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. (செ-5)

# "காணாமல் போனவர்கள் என்று யாரும் இல்லை" என்று கோத்தபாய சொல்லுவதை ஏற்க முடியாது- மனோ கணேசன்

(கொழும்பு)

**காணாமல் போனவர்கள் என்று யாருமில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சொல்லுவதை எந்த ஒரு அடிப்படையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

காணாமல் போனோர் தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்து கூறுகையிலேயே மனோ கணேசன் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உலகறிந்த இந்த மகா உண்மையை இவர் ஒன்றுமில்லை என சொல்லுவது காணாமல் போன தமது உறவுகளைத் தேடித் திரியும் அப்பாவி குடும்ப உறவுகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது.

குரலற்ற இந்த அப்பாவி மக்களுக்கு குரலாக நாம் அன்றும் இருந்தோம். இன்றும் இருக்கிறோம் என்றும் இருப்போம் என்பதை இந்த அரசாங்கத்துக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் வன்னியில் வாழ்ந்த சனத்தொகை எவ்வளவு என்பது கூட இந்த அரசாங்கத்துக்கு ஒருபோதும் தெரிந்து இருக்கவில்லை. இறுதி யுத்தம் நடைபெற்ற காலத்தில் வன்னியின் சனத்தொகை 70 ஆயிரம் மாத்திரமே என்று இவர்கள் சொன்னார்கள். ஆனால், யுத்தம் முடிவுக்கு வந்த போது இவர்களது இடம்பெயர் முகாம்களுக்கே 3 இலட்சம் மக்கள் வந்து சேர்ந்தார்கள்.

ஆகவே இவர்களது கணக்குப்படியே ஏறக்குறைய 2 இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் மேலதிகமாக இருந்துள்ளார்கள். ஆனால், உண்மையில் வன்னியின் சனத்தொகை ஏறக்குறைய 4 இலட்சத்து 50 ஆயிரம் என்பது புள்ளிவிபரப்பட்டியல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இது யுத்தத்தின் போது வன்னியில் இருந்த ஆடு, மாடு, கட்டாக்காலி நாய்களின் தொகைகள் அல்ல. மாந்தர்களின் கணக்கைத்தான் நாம் சொல்கிறோம். எனவே, சனத்தொகை கணக்கு தெரியாத அரசாங்கம் கணக்குப் போட்டு பார்த்துக்கொள்ள வேண்டும்.

கணக்கு தெரியாத அரசாங்கம் இன்று புதிய கணக்கு காட்டுகிறது. யுத்தத்தின் போது எவரும் காணாமல் போகவில்லை என இன்று புதுக்கதை பேசுகிறது. இதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். உலகமும் ஏற்றுக் கொள்ளாது.

வன்னி யுத்தத்தில் தப்பி வந்த அனைத்து மக்களும் இந்திய இராணுவ மருத்துவ பிரிவு நடத்திய மருத்துவமனைகளுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மருத்துவமனைகளுக்கும் சென்று அவற்றின் மூலமாகவே அரசாங்கம் நடத்திய முகாம்களுக்கு வந்து சேர்ந்தார்கள் என பாதுகாப்பு செயலாளர் கூறுகிறார்.

இது உண்மை அல்ல. ஒரு பகுதியினர் மாத்திரமே இப்படி வந்தார்கள். ஒரு பகுதியினர் நேரடியாக அரச படைகளால் கைது செய்யப்பட்டார்கள். அல்லது படையினரிடம் சரணடைந்தார்கள்.

இன்று நாம் இலங்கையில் உள்ள இந்திய தூதரிடமும் கொழும்பில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் இதுபற்றி கேள்வி எழுப்புகிறோம்.

யுத்தத்தில் இருந்த தப்பி வந்து முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட அனைத்து தமிழ் மக்களும் தங்கள் அமைப்புகள் மூலமாகவே வந்து சேர்ந்தார்கள் என்பதை இந்திய இராணுவ மருத்துவ பிரிவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் உறுதி செய்ய முடியுமா?

இதுபற்றி மக்கள் கண்காணிப்பு குழுவின் சார்பாக நான் எழுத்துமூலம் இவர்களிடம் பதில் கோரியுள்ளேன்.

இறுதி யுத்தத்திற்கு முன்னரே தலைநகர் பகுதியில் மாத்திரம் சுமார் 500 இற்கும் மேற்பட்டோர் கடத்தப்பட்டார்கள். கடத்தப்பட்டோர் தொடர்பாக முழு விபர பட்டியலை நான் அப்போது கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் நாடாளுமன்றத்தில் இலங்கை பிரதமரிடம் கையளித்தேன்.

அப்போதுகூட இந்த அரசாங்கம் அதை மறுத்து நம்ப முடியாத கதைகளை பேசி என்னை அச்சுறுத்தியது.

எனவே, கணக்கு தெரியாத அரசாங்கத்திடம் கணக்கக்கேட்டு பயனில்லை என்பதால் தான் நமது பிரச்சினைகளை நாம் சர்வதேசத்துக்கு கொண்டு சென்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-2)

## பாம்புகள் இறக்கப் போகின்றன; காப்பாற்றுமாறு பாம்புப்பெண் கோரிக்கை

உணவின்றி எனது இரண்டு பாம்புகளும் இறக்கப் போகின்றன. காப்பாற்றுமாறு பாம்புப் பெண் நிரோசா விமலட்ண கோரிக்கை விடுத்துள்ளார். தனது இரண்டு பாம்புகளும் பல நாட்களாக உணவின்றி காணப்படுகின்றன. அவை இறக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

சவுதியை சேர்ந்த தமது ஆண் நண்பரால், வெல்லம்பிட்டிய பகுதி வீடொன்றில் சிறைவைக்கப்பட்ட தாம் தாக்குதலுக்கு உள்ளானதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின் னர் பொலிசாரால் மீட்கப்பட்ட தாம் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று திரும்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த வீடு கடந்த சில நாட்களாக பூட்டிக்கிடப்பதாகவும் அங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ள தமது இரண்டு பாம்புகளுக்கும் உணவு இல்லாமல் அவை இறக்கக் கூடும் என்றும் நிரோசா அச்சம் வெளியிட்டுள்ளார்.

எனவே பொலிசார் வீட்டில் உள்ள பாம்புகளை மீட்க வேண்டும் என்று கோரியுள்ள அவர் தம்மை தாக்கிய சவுதியின் தமது ஆண் நண்பரை கைது செய்ய வேண்டும் எனவும் கோரியுள்ளார். (2-9)

## கந்தன் கருணை மடம் அடிக்கல் நாட்டு விழா

(தும்பளை)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் "கந்தன் கருணை மடம்" புதிதாக நிர்மாணிக்கப் படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெய சீலன், வல்வெட்டித் துறை நகரசபை தவி சாளர் என்.அனந்த ராஜ் இந்து கலாசார திணைக்கள செயலாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பல ஆண்டுகளு க்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டு இய ங்கி வந்த மேற்குறி த்த மடம் நீண்டகால மாக இயங்காமல் இருந்தது.

தற்போது அக்கட் டடம் புனரமைக்கப் பட்டு ஒரு கோடி ரூபா செலவில் புதிதாக நிர் மாணிக்கப்படவுள் ளது. (செ-3-19)

## சேவை நலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம், மத்தியஸ்தர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரியாக கடமையாற்றி ஓய்வு பெறும் திருமதி ஏ.எப். ஜே.ரூபசிங்கம் சேவையை பாராட்டி நடைபெறும் சேவைநலன் பாராட்டு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.


- தபால் மூலம் -

**ஆறு மாத கால டிப்ளோமா**

**Course Length - Six Month**

**2013 January- 2013 June**

24 வருட அனுபவம்

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(சி/2242) விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2013



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>உயரம்: 5'8"<br>கி.பா: 23.75, 2 இல் செவ்.<br>தகைமை/தொழில்: B.Com (Acc.spl) HNDM ஆசிரியர்<br>தொ.இ: B -1041 | பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 4, 12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: B.Sc Computer Science, IT Manager NHS<br>தொ.இ: G -1105 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>உயரம்: 5'3"<br>கி.பா:18<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் Work Permit (UK)<br>தொ.இ: B -1046 | பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 48<br>தகைமை/ தொழில்: BA ஆசிரியை<br>தொ.இ: G-1108 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம் 2<br>உயரம்: 5'8"<br>கி.பா: 3<br>தகைமை/ தொழில்: B.Sc(Hons), (Q.S) டுபாய்<br>தொ.இ: B -1047 | பிறப்பு: 1968 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>உயரம்: 5'3"<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1111 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'1"<br>கி.பா: 24.5<br>தகைமை/தொழில்: A/L, முகாமைத்துவ உதவியாளர்<br>எ.பா:சைவபோசனம்<br>தொ.இ: B -1051 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'2"<br>கி.பா: 37.75, 12இல் செவ்<br>தகைமை/ தொழில்: B.Sc (Hons), Agri Sc<br>தொ.இ: G -1112 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் பயன்தரும் மரங்களும் வேளாண் காடுகளும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 24-XII



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வடபகுதிக்கென இங்குள்ள மிருகங்கள், தாவரங்கள் ஒன்றிணைந்த தாவரவியல் பூங்காவோ அன்றி வனவிலங்குகள் சரணாலயமோ, மிருகக்காட்சிச்சாலையோ இல்லை. எமது பிரதேசத்திலுள்ள வளங்களை பிரதிபலிக்கும் அனைத்தையும் உள்ளடக்கிய இவற்றை நாம் உருவாக்க வேண்டும் என்ற கேள்வியும் பரவலாக எழுந்துள்ளது. தாவரவியல் பூங்காவில் பேராதனையிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் அமைந்திருப்பதைப் போன்றதொரு பூங்காவை அமைப்பதன் மூலம் கல்வி வளர்ச்சிக்கும் கொண்டிருக்கிறோம். "என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்'' இதை வெறும் பாடலாகவே பார்க்காது உள்ளார்ந்து பார்த்தால் இதன் தாற்பரியம் விளங்கும். பலருக்கு இதை விளங்கிக்கொள்ளவே சிரமமாக இருக்கின்றது. உன்னை நம்பு, உன் தேசத்தை வணங்கு, உன் தாயைப் போல தாய் நாட்டையும் மதி, உன் உணர்வு மரத்துப் போனாலும் மரத்திற்கு மதிப்பு கொடு. நூற்றைம்பதாவது பிறந்தநாளில் விவேகானந்தர் அருளியவையை ஒரு கணம் மீட்டிப்பார். அனைத்துமே நிதர்சனமானவையாகும்.

யமாக வைத்து தாவர பூங்கா மற்றும் விலங்கு சரணாலயங்களை அமைக்கலாம். வடபகுதியில் நிகழ்ந்த போரில் பல உயிரினங்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு அவையிருந்த வனப் பகுதியிலிருந்து விரட்டப்பட்டுள்ளன. அதனால் அவை நகர்ப்புறத்திற்கு படையெடுத்து பயிர்களில் மனிதனது உடமைகளில் அழிவையும் ஏற்படுத்துகின்றன. மீண்டும் இவ்வுயிரினங்கள் வாழ்ந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எமதுபொறுப்பாகும். இதற்காக மீள வனமாக்கல் திட்டங்களை அமுல்ப்படுத்த வேண்டும். இன்னும் மீள வனமாக்கல் என்பது ஓரிரவில் நடைபெறும் நிகழ்வு அல்லவே, பல ஆண்டுகள் இதற்கு தேவைப்படும். இன்று திட்டமிட்டால் தான் நாளை அதனை நடைமுறைப்படுத்த தொடங்கலாம். இவற்றை மெல்லமெல்ல செய்து முடிக்க நீண்ட நாட்களெடுக்கும். கண்டல் காடுகளின் அளவை அதிகரிக்கவும் அதிலுள்ள தாவரங்களைப் பேணவும் வழிசெய்தல் வேண்டும். குறிப்பாக பனை மரத்தில் பல வகைப் பயன்பாடுகளையுடையவற்றை அந்த இனங்களை இனங்கண்டு அழியவிடாது பேணிப்பாதுகாக்க வேண்டும். இது போல ஏனைய மரங்களின் தன்மைகளை அறிந்து அவற்றின் இனங்களை வகைப்படுத்தி பாதுகாக்கும் வழி முறைகளை தேடிக்கண்டுபிடிக்க வேண்டும். இது சார்ந்த வேளாண் காடுகள் (Agroforestry) பற்றிய கல்வியை விரிவுபடுத்துவதை மேற்கொள்வது அவசியம். கற்கை முறைகளுக்கூடாக இதற்கொரு பலமான அத்திவாரம் இடப்பட வேண்டு மென்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். கல்

இப்பிரதேசத்து அருமை பெருமையான தாவரங்களை பேணிப் பாதுகாக்கவும் விருத்தி செய்யவும் முடிவதோடு சுற்றுலாத் துறையினை விரிவாக்கவும் வழி கிடைக்கும். இதன் மூலம் வேலைவாய்ப்பு பெருகுவதுடன் இவ்விடயங்கள் சார்ந்த அபிவிருத்தியும் ஏற்பட வழிகிடைக்கும்.

தாவரவியல் பூங்காவில் இங்குள்ள மரங்களனைத்தையும் பிரதிபலிக்க அவற்றை நடுகை செய்தல் நல்லது. பல மரங்களை இனிவருஞ்சந்ததி தெரிந்து வைக்கவாவது நாம் இம்முயற்சியில் ஈடுபடுவது முக்கியமானது. வாருங்கள்! அனைவரும் இணைந்து இக்கூட்டு முயற்சியில் ஈடுபடுவோம். எமது பிரதேசத்து வளங்களை நாங்கள் தானே காப்பாற்ற வேண்டும். எமது நாடு ஒரு அழகிய தீவு. பல்வேறு வகையான பல்வகைத் தன்மையை கொண்டிருக்கும் நாடு இது. இந்த விடயங்களில் நாம் கவனத்தைச் செலுத்தாமல் எதை எதைப் பற்றியோ பேசிக்

வடபுலத்து நிலத்தின் தன்மையைப் பிரதிபலிக்கும் ஒரு நிரந்தரமான கண்காட்சி கூடத்தை எம்மாணவச் செல்வங்களின் அறிவை வளர்க்கவாவது நிர்மாணிக்க முயற்சி செய்வோம். அனைத்து சூழலியல் தன்மைகளையும் உள்வாங்கி ஒருங்கிணைத்து சிறுகக்கட்டி பெருகவாழ முயற்சி செய்வோம்.

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை. ஆனால் எம்மிடமுள்ள வளத்தை பயன்படுத்தி எமது பகுதியையும் பச்சையாக்குவோம். அதுவே இன்னொரு பசுமைப் புரட்சியின் அத்திவாரமாகும். அனைத்து வளங்களையும் தட்பவெப்ப நிலைகளையும் உள்ளடக்கிய எமது நாட்டினை வளங்கொழிக்கும் இடமாக, ஆசியாவின் ஆச்சரியமாக மாற்ற எங்கள் அன்னவராலும் முடியும். இறைவனை பக்தி பூர்வமாக வணங்குவதற்கு பல கோடி பணம் செலவழித்து கோவில் கட்டுவதிலும் இறைவனின் பெயரால் புண்ணியம் செய்தலும் இவ்வாறான கல்வி மற்றும் அபிவிருத்தியைமை

விப் புலம் சார்ந்த அனைவரும் தேசத்தின் அபிவிருத்திக்காக ஒன்றிணைவோம். தாவர சங்கமத்தின் சூட்சுமத்தை சிவபுராணத்தில் மணிவாசகப்பெருமான் அருமையாக விளக்கியிருப்பதை வெறுமனே ஜெபஞ் செய்வதோடு நிறுத்திவிடாது அதனை எமது வாழ்வியலுடன் பொருத்திப்பார்த்து நாமும் அவர் அருளிய நல்வழிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தும் காட்டவேண்டும். மரத்திற்குள்ளே இவ்வளவு இருந்தும் மரத்துப் போன மனித மனத்திற்கு இது எப்போது புரியப்போகின்றது. பல்பயன் தரும் மரங்களும் வேளாண் காடுகளும் சொல்லும் இச்சேதிகளை நாம் எப்போது புரிந்து நடக்கின்றோமோ அன்றே மனித குலத்திற்கு விடியல் என கொள்ளலாம்.

# இனவாதத்தை இல்லாதொழிக்கின்ற தெரிவுக்குழுவை வரவேற்கின்றோம்-அசாத் சாலி

(கொழும்பு)

இனவாத, அடிப்படைவாத, தீவிர வாத செயற்பாடுகளை ஆராய்வதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்று நிறுவப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளதை நாம் வரவேற்கின்றோம் என்று முஸ்லிம், தமிழ் ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இனங்களுக்கிடையில் முறுகல் நிலையைத் தோற்றுவிக்க முயலும் அடிப்படைவாத, தீவிவாத சக்திகளை இனம்காண ஒரு நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா திடுதிப்பென ஒரு அறிக்கையை விட்டுள்ளார்.

மிகவும் காலம் கடந்தாவது இந்த விடயத்தில் கவனம் செலுத்த அரசாங்கம் முயலுவதை நாம் வரவேற்கின்றோம். ஆரம்பத்திலேயே இதைச் செய்திருந்தால் இந்நேரம் பல பச்சோந்திகள் இனம் காணப்பட்டிருப்பர்.

எவ்வாறாயினும் பிரச்சினை முற்றி ஒரு புற்றுநோய் போல் நாடு முழுவதும் பரவியுள்ளநிலையிலாவது அரசு இதுபற்றி கவனம் செலுத்த முன்வந்துள்ளதை நாம் வரவேற்கின்றோம்.

ஆனால் இது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகவோ அல்லது காலம் கடத்தும் நடவடிக்கையாகவோ இருக்கக் கூடாது.

விசாரணை என்ற பெயரில் காலத்தை கடத்தி இந்த இனவாத மனநோய் மேலும் பரவி நாட்டில் இனவாத மனநோயாளிகளின் தொகை மேலும் பெருக அரசு இடமளிக்கக் கூடாது.

ஏற்கனவே இந்த இனவாத, தீவிரவாத மற்றும் அடிப்படைவாத சக்திகளின் பெருக்கத்திற்கு காரணமாக அரசாங்கத்தின் மறைகரங்கள் செய்றபடுவதாக சிறுபான்மை சமூகத்தவர்களிடம் சந்தேகம் எழுந்துள்ளது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொலிசார் நடந்து கொள்ளும் விதத்தை அவதானிக்கும் போது சந்தேகம் நியாயமானது என்றே தோன்றுகின்றது.

எனவே அரசாங்கம் இந்த சந்தேகங்களைக் களைய இதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவியில் இருந்து விரட்டுவதில் நாடாளுமன்ற தெரிவுக்குழு எவ்வளவு வேகமாகச் செயற்பட்டதோ அதே வேகத்தை இந்தத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டிலும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

அது மட்டுமன்றி இந்த உத்தேச நாடாளுமன்ற தெரிவுக்குழு சகல கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளை சம அளவில் உள்ளடக்கியதாகவும் இருக்கவேண்டும். அப்போதுதான் அது நம்பத் தகுந்ததாகவும் அமைய முடியும் என்று அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (செ-5)

## மாதாந்த பொதுக்கூட்டம்

யாழ். மாநாகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான முதலாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகர சபை செயலாளர் சி.தா. தர்மரட்ணம் அறிவித் துள்ளார். (2-9)

## அலங்கார உற்சவம்

(பூந்தோட்டம்)

வவுனியா தாண்டிக்குளம் பத்தினியார் மகிழங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறவுள்ளதுடன் இறுதி நாளான 3 ஆம் திகதி 108 சங்காபிஷேக நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (செ-9-266)

# சுகாதார சீர்கேட்டுடன் கிளிநொச்சி கொல்களம்!

## துர்நாற்றம் வீசுவதாக மக்கள் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மீன்சந்தைக்கு பின்புறமாக அமைக்கப்பட்டுள்ள கொல்களத்திலிருந்து துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி அம்பாள் குளக் கிராமத்திலேயே கிளிநொச்சி மீன்சந்தை, மரக்கறிச் சந்தை ஆகியன அமைந்துள்ளன. இம்மீன் சந்தையின் பின்புறமாகவே இடப்பெயர்வின் பின்னர் கொல்களம் அமைக்கப்பட்டு இறைச்சிகள் வெட்டப்படுகின்றன.

இக்கொல்களத்தில் வெட்டப்படும் இறைச்சிகளின் கழிவுகள் ஒவ்வொரு நாளும் பிரதேச சபையின் கழிவு அகற்றும் பிரிவினரினால் அகற்றப்படுகின்றன. இருப்பினும் எஞ்சிய, சிதறிக் காணப்படும் கழிவுகளினால் அப்பகுதி தொடர்ந்தும் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த கால இடப்பெயர்விற்கு முன்னர் இக்கொல்களமானது சுடலைக்கு அருகிலேயே காணப்பட்டது. ஆனால் இறுதிக்கட்ட யுத்த சூழ்நிலையின் பின்னர் இக்கொல்களம் சந்தைக்கு பின்புறமாக அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி மக்களும் வீதியால் பயணிப்போரும் தினமும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். இவை தொடர்பாக பிரதேச சபை, கிராம அலுவலர், சுகாதாரப்பரிசோதகர் ஆகியோருக்கு அறிவித்தும் இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன் இப்பகுதியில் வசிக்கும் இருவர் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்களாக இருந்தும் எவ்வித பயனும் இல்லை என மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (செ-9)

# கலாசார வேலைத்திட்டத்திற்கு ஐந்து இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(பூந்தோட்டம்)

வடமாகாணத்தில்பிரதேசசெயலகபிரிவுகளில் 2013 ஆம் ஆண்டின் கலாசார வேலைத்திட்டத்திற்கு தலா 5 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

வட மாகாண ஆளுநரினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்நிதியில் கலை இலக்கிய விழா நூல் வெளியீடு, நாடக பயிற்சி பட்டறை, கலாசார விழிப்புணர்வு செயலமர்வு, இசைக் கவி கொள்வனவு, இசை நாடக நடன பயிற்சி வகுப்புக்கள் நடத்துதல், ஆவணப்படம் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நிதிக்காக ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவில் இருந்தும் திட்ட முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளதுடன் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண கல்வி அமைச்சில் முன்மொழிவுகள் ஆராயப்பட்டு இறுதி தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (செ-9-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனமோதல்களைத் தூண்டுவோரை அரசு கடுமையாகத் தண்டிக்கும்!

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் இனங்களுக்கு இடையில் மீண்டும் மோதல் ஒன்றை உருவாக்கும் நோக்கில் சில தீவிர அமைப்புக்கள் மேற்கொள்ளும் முயற்சிகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும். என அமைச்சரவைப் பேச்சாள ரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் தகவல் ஊடக அமைச்சில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,


இலங்கையில் இனங்களுக்கு இடையில் மீண்டும் மோதல் ஒன்றை உருவாக்கிவிட்டு அதற்காக அரசின் மீது பழிசுமத்தும் முயற்சியில் சில அமைப்புக்கள் திட்டமிட்டு இயங்கி வருவதாக அரசாங்கத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அந்த அமைப்புக்களின் செயற்பாடுகளை நேரில் காணக்கூடியதாகவும் உள்ளது. முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுபற்றி அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

சிங்கள மற்றும் பௌத்த அமைப்புக்களால் வெளியிடப்படும் அறிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.

யுத்தம் காரணமாக சீரழிந்து போயிருந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் இந்த நேரத்தில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஓரக் கண்ணால் தவறாக நோக்கும் சிலரில் இவ்வாறான திட்டமிட்ட நடவடிக்கைகள் குறித்து ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு இதுவரையில் காத்திரமான சாட்சியங்கள் இல்லாதபோதும் இவர்களது நடவடிக்கைகளுக்கு பலமான பின்னணியிருப்பது தெரியவந்துள்ளது.



எனவேதான் இன மோதல்களைத் தடுக்கும் முதல் நடவடிக்கையாக ஊடகங்கள் எமது தேசிய ஒருமைப்பாட்டை நினைவில் வைத்து பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

இனங்களுக்கு இடையில் பேதங்களையும் மோதல்களையும் தூண்டுவோருக்கு எதிராக அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் கூறினார். (செ-2)

## மஹாகும்பாபிஷேகம்

இளவாலை ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் காலை 9.15 மணிவரை நடைபெறவுள்ளது. இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 3 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

****

அளவெட்டி வடக்கு அருள்மிகு ஶ்ரீ பத்திரகாளி சமேத ஆதி வீரபத்திரர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் காலை 9.15 மணிவரை நடைபெறவுள்ளது. இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப.5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறவுள்ளது. (செ-3-28)

## பரந்தன்-முல்லை வீதியில் வீதி ஒழுங்கு குறியீடு

(புளியம்பொக்கணை)

ஏ- 35 பரந்தன் -முல்லை வீதியில் புனரமைக்கப்பட்ட பகுதிகளுக்கு வீதி ஒழுங்கு குறியீடுஅமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் பரந்தனில் இருந்து றெட்பானா வரையுள்ள வீதியின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப் பட்டதால் வீதி ஒழுங்கு குறியீடமைக்கப் பட்டு வருகின்றது. இதனால் குறித்த காலத்தில் இடம்பெற்ற விபத்துக்கள் குறைக் கப்படும் என அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (செ-3-263)

## போதிய வருமானமின்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பாளர்கள் போதிய வருமானமின்மையால் பாதிப்படைந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது விவசாய காலமென்பதால் கால்நடைகளின் மேய்ச்சலுக்கு தரை இன்மையினால் அவற்றுக்கான உணவுகளை தேடிக் கொள்வதில் சிரமம் ஏற்படுவதாகவும் தாம் வர்த்தக நிலையங்களில் தவிடு மற்றும் தானியங்களை வாங்கி இவற்றுக்கு உணவாக பயன்படுத்தி வருவதாகவும் கூறுகின்றனர்.

இவ்வாறு பணத்தை செலவு செய்து உணவுகளை கால்நடைகளுக்கு வைத்த போதிலும் அவை போதியளவான பாலை தராத காரணத்தால் தமது அன்றாட வாழ்வாதாரம் பாதிப்படைவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கால்நடைகளை பட்டிகளில் இருந்து மேய்ச்சலுக்கு விடும்போது அவை விவசாய நிலங்களுக்குள் சென்றதால் பாதிப்படைந்த பயிர்களுக்கான நஷ்ட ஈட்டினை கால்நடை வளர்ப்பாளர்களே வழங்கவேண்டியுள்ளதால் தாம் மிகவும் கஷ்டத்தினை எதிர்கொள்வதாகவும் எனினும் கால்நடை வளர்ப்பினை தாம் கைவிட முடியாது உள்ளதாகவும் அதுவே தமது பிரதான ஜீவனோபாய வருமானமாக உள்ளதெனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்து தமது ஜீவனோபாயத்திற்குரிய வழிகளைச் செய்து தருமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (செ-9-250)

## கஞ்சா கடத்தலில் கைதானார் ஒருவர்

இந்தியாவிலிருந்து மன்னாருக்கு கடல் வழி மூலமாக கடத்தப்பட்ட 80 கிலோகிராம் ஹேரனா கஞ்சா மன்னார் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறு கைப்பற்றப் பட்ட கஞ்சாவின் பெறுமதி கோடி ரூபாய் மதிப்பில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 23 ஆம் திகதியன்று மன்னார் பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இக் கஞ்சா கைப்பற்றப்பட்டு உள்ளது. இக்கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட மன்னார் பனங்வாட்டு கொட்டுவினைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.ஈ.எல்.பெரேரா தெரிவித்தார். மேலும் இக்கஞ்சா கடத்தலின் பின்னணியில் இருப்பவர்கள் தொடர்பில் மன்னார் பொலிஸார் புலனாய்வு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

## பிரதான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் சரியான தீர்வுகளை வழங்கவில்லை

### பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இதுவரையில் சரியான தீர்வுகளை வழங்கவில்லை என பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

குறிப்பாக கல்வி தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த பொதுவான பல்வேறு பிரச்சினைகளுக்கு இதுவரையில் தீர்வு வழங்கப் படவில்லை என தெரிவித்துள்ளது.

பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக சகல தரப்பினரையும் இணைத்துக் கொண்டு விரிவான நடவடிக்கையொன்றை கட்டியெழுப்ப வேண்டியுள்ளதாக பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளை அடுத்து சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட மேலும் சில பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தேசிய கல்வி தொடர்பாக தமது சம்மேளனத்தினால் முன்வைக்கப்பட்ட பொதுவான பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இதுவரையில் சரியான தீர்வுகளை வழங்கவில்லை என பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

குறிப்பாக கல்வி தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த பொதுவான பல்வேறு பிரச்சினைகளுக்கு இதுவரையில் தீர்வு வழங்கப் படவில்லை என தெரிவித்துள்ளது.

பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக சகல தரப்பினரையும் இணைத்துக் கொண்டு விரிவான நடவடிக்கையொன்றை கட்டியெழுப்ப வேண்டியுள்ளதாக பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளை அடுத்து சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட மேலும் சில பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தேசிய கல்வி தொடர்பாக தமது சம்மேளனத்தினால் முன்வைக்கப்பட்ட பொதுவான பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-2)



குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை 2012 திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுன்னாகம் பேருந்து தரிப்பு நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் பிரதேசசபைத் தவிசாளர் பிரகாஷ் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

351

## ஹேமவதி



ராஜபுத்திரர்களில் ஆண்களும் பெண்களும் வீரத்துடன் விளங்குபவர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஒருதடவை மேவார் தேசத்து யுவராணா ஹரிசிங் தன் வீரர்களுடன் காட்டில் வேட்டையாடிக்கொண்டிருந்தான். அப்போது காட்டுப்பன்றி ஒன்று காணப்படவே அதை அவன் துரத்திக்கொண்டு போனான். அவன் பின்னாலேயே அவனது வீரர்களும் ஓடினார்கள். பன்றி சற்றுத் தூரத்திலிருந்த ஒரு சோளக்காட்டிற்குள் நுழைந்து அடர்ந்து வளர்ந்திருந்த சோளத் தட்டுகளிடையே ஒளிந்துகொண்டு விட்டது. இதைச் சோளக்காட்டைக் காவல்புரிந்து கொண்டிருந்த பெண் கவனித்து விட்டாள்.

ஹரிசிங் அந்தச் சோளக் காட்டிற்குள் போகவில்லை. ஏனெனில் வேறொருவருக்குச் சொந்தமான காட்டிற்குள் தான் போவது சரியல்ல என்று அபிப்பிராயப்பட்டான். அதற்குள் அந்தப் பெண்ணே பரண் மீதிருந்து கீழே இறங்கி வந்தாள். யுவராணாவைப்பார்த்து காட்டுப் பன்றிதானே வேண்டும் உங்களுக்கு? என்னிடம் ஒரு கூர்மையான கழியைக்கொடுங்கள்.

### அம்புலிமாமா கதைகள்

நான் கொன்று கொண்டு வந்து கொடுக்கிறேன் என்றாள்.

ஹரிசிங் தன் வீரர்களிடமிருந்து ஒரு கூர்மையான மூங்கில் கழியை வாங்கிக்கொடுக்கவே அவளும் அங்கிருந்து போய்விட்டாள். ஆனால் இந்தச் செய்கை ராணா உடன் வந்த அந்த வீரர்களுக்குப் பிடிக்கவில்லை. அவன் வேட்டையாடிக்கொண்டுவந்த மிருகத்தை மற்றவன் கொன்றால் அவர்கள் ஒருவரை மற்றொருவர் ஜென்மவிரோதியாகவே நினைப்பார்கள். ஆகவே அந்தப் பெண்ணின் செய்கை அவர்களுக்குக் கோபத்தை உண்டாக்கியது.

அந்தப்பெண் பன்றியைக் கொன்று ஹரிசிங்கின் முன் கொண்டு வந்து போட்டாள். அவன் அவளின் துணிச்சலையும் பராக்கிரமத்தையும் கண்டு சந்தோசம் அடைந்தான். தன் கழுத்திலிருந்த ஒரு முத்துமாலையை எடுத்து அவளுக்குப் பரிசாகக் கொடுக்கப் போனான். ஆனால் அவளோ அதை வாங்கிக்கொள்ளவில்லை. வெகு பணிவாக அதை ஏற்கமறுத்துவிட்டு முன்போல காட்டைக்காவல் புரிய தன் பரணுக்குச் சென்று விட்டான்.


ஹரிசிங் காட்டுப்பன்றியை எடுத்துக்கொண்டு தன்னுடைய வீரர்க



ளுடன் அருகிலிருந்த ஒரு குளக்கரையை அடைந்தான். எல்லோரும் சாப்பிட்ட பின்பு களைப்புத்தீர சற்றுநேரம் அங்கு படுத்துக் கொண்டனர். அப்போது எங்கிருந்தோ ஒரு கல் வந்து யுவராணாவின் குதிரையின் காலில்பட்டது. உடனே வீரர்கள் கல்வந்த திசையை நோக்கி ஓடினார்கள். சற்றுத்தூரத்தில் பரண்மீது நின்று கொண்டு அந்தப் பெண் தான் கல்லை, வீசிக்கொண்டிருந்தாள். எல்லோரும் அங்கே கூட்டமாகப்போய் நின்றனர். அதைக் கண்ட அவள் சற்றும் கலங்கவில்லை.

ஆத்திரமடைந்த வீரர்கள் அவளை அதட்டி ஹரிசிங்கின் முன்கொண்டு போய் நிறுத்தினார்கள். அவளோ சற்றும் பயப்படாமல் தன் மடியில் கட்டிவைத்திருந்த சோளக்கதிர்களை அவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்து நான் பட்சிகளை விரட்ட வீசிய கல் உங்கள் குதிரை மேல் பட்டுவிட்டது போல் தெரிகிறது. அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன் என்றாள். இதைக்கேட்ட ஹரிசிங் அதனால் என்ன பரவாயில்லை என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டாள். ஹரிசிங் அந்தப் பெண்ணை அனுப்பிவிட்டாலும் மற்ற வீரர்களின் கோபமும் ஆத்திரமும் சற்றும் தணியவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் யுவராணா ஹரிசிங் அங்கிருந்து புறப்படத் தயாரானான். இந்தச்சமயத்தில் சற்றுத்தூரத்தில் அந்தப்பெண் தலையில் ஒரு பாற்குடத்தை எடுத்துக்கொண்டு தன் இரு ஆட்டுக்குட்டிகளையும் ஓட்டிக்கொண்டு வந்து கொண்டிருந்தாள். இதைக்கண்ட வீரர்களில் ஒருவனுக்கு அவளை எவ்விதத்திலும் அவமானப்படுத்தவேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. ஆகவே தன் குதிரையை ஓட்டிக்கொண்டு வெகு வேகமாகச் செல்லலானான்.

குதிரையைக் கொண்டு தன்னை மிரளச்செய்து கீழே விழச் செய்



யவே அவ்வீரன் வருகிறானென்பதை அந்தப் பெண் நொடியில் தெரிந்துகொண்டுவிட்டாள். ஆகவே, தன் ஆட்டுக்குட்டிகளை பாதையில் குறுக்காக ஓட்டிக்கொண்டிருந்தாள். இதைக்கண்ட வீரனின் குதிரை மிரண்டு அவனைக் கீழே தள்ளிவிட்டு ஓடியது. அவள் கலகலவென்று சிரித்துவிட்டு அங்கிருந்து சென்று பாற்குடத்தை ஹரிசிங்கின் முன்வைத்தாள்.

ஹரிசிங் அவளுடைய பெயர் ஹேமவதி என்றும் ராஜபுத்திர வம்சத்திலேயே அரசபரம்பரையில் பிறந்தவளென்பதையும் தெரிந்துகொண்டான். அவளது ஊரின் பெயரையும் வீட்டையும் விசாரித்துத் தெரிந்து கொண்டான். கடைசியில் அவளிடம் அவளது தகப்பனாரை தன் கூடாரத்திற்கு வந்து பார்க்கச்சொல்லி அனுப்பினான்.

கூடாரத்திற்குப் போய்ச் சேர்ந்த ஹரிசிங் சற்று நேரத்திற்கெல்லாம் சற்று வயதான ஒருவர் வருவதைக் கண்டான். அவர்தான் ஹேமவதியின் தகப்பனார் என்பதைத் தெரிந்து கொண்டான். அவரை வரவேற்றுத் தனக்குச் சமமான ஆசனத்தில் உட்காரவைத்தான். அவருடைய பெண்ணைத் தான் மணக்க விரும்புவதாகத் தெரிவித்தான்.

சுற்றியிருந்த வீரர்களோ உடனே அந்தப் பேர்வழி இதற்கு இணங்கி விடுவாரென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவரோ யுவராணா நீங்கள் சொல்வது சரி. நீங்கள் ராஜகுமாரர்தான். எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் என் பெண்ணின் விருப்பத்தையும் கேட்டுத்தான் முடிவான பதிலைச் சொல்லமுடியும் என்றார். இதைக் கேட்ட மற்றவர்களுக்குக் கோபமாய்த்தானிருந்தது. அதுவும் சற்று நேரத்திற்கு முன் குதிரையிலிருந்து கீழே விழுந்த வீரனுக்கு ஆத்திரம் வந்தது.

அவன் அவரைப்பார்த்து ஏய் கிழவா! உனக்கு என்ன திமிர்? எங்கள் யுவராஜாவே வலியவந்து பெண்கேட்கும்போது உனக்குக் கசக்கிறதா? உன் பெண் ஏதாவது மறுப்புத் தெரிவித்தால் என்ன நடக்கும் தெரியுமா? என்று சீறினான். அவனைக் கையமர்த்திய ஹரிசிங் கிழவரை நோக்கி ஆமாம் நீங்கள் சொல்வது ரொம்பவும் சரி. உங்கள் பெண் ணின் விருப்பத்தைத் தெரிந்து கொண்டு வந்து எனக்குச்சொல் லுங்கள்.

உங்கள் பெண்ணை எனக்காகக் கட்டாயப்படுத்தாதீர் என்றதைக் கேட்ட ஏனைய வீரர்கள் அனை



வரும் வாய் அடைத்துப் போனார்கள்.

வீட்டிற்குப்போன அவர் கொஞ்ச நேரத்திற்குப் பின் ஹேமவதியின் சம்மதத்தைப்பெற்று யுவராணா ஹரிசிங்கிற்குத் தெரிவித்தார். ஒரு நல்ல முகூர்த்தத்தில் அவர்களுக்கு விவாகம் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பவளாங்கி பன்னிகள விக்கிறத நிறுத்திட்டா; குட்டி ஆடுகள வித்து வித்துக் குடும்பம் நடத்துறா.

விட்டுப் புடிச்சா புருசன் வந்துருவான் பாவம்னு பொறுத்துப் பொறுத்துப் பாத்தா கனகராணி. நாலஞ்சு மாசமாச்சு- ஆளக் காணோம். ஆள் சொல்லிவிட்டா; அதுக்கும் பலன் இல்ல. அவன வீட்டுக்கு இழுக்க என்ன வழின்னு யோசிச்சவ பிள்ளைக்குக் காதுக்குத்துன்னு ஒரு காரணத்த வச்சா. பன்னிக்காரி வீட்டுக்கே போயிட்டா.

திண்ணையில புருசன்- வீட்டுக்குள்ள பவளாங்கி- வாசல்ல பொண்டாட்டி.

சத்துள்ள மட்டும் கத்துறா கனகராணி.

“யோவ் வந்துருய்யா- ஆடும் பன்னியும் ஒரு தொட்டியில தண்ணி குடிக்காதுய்யா. பிள்ளைக்குக் காது குத்து வைக்கணும். எண்ணிக்கை குறையாம ஆடுகளோட வந்து சேரு.”

“என்னிய எந்த முறையில கூப்புடுற?”

“என் புருசனாக் கூப்பிடலய்யா. என் புள்ளைக்கு அப்பனா வந்து சேரு.”

“சோளக் கூழும் சுட்ட [illegible]காயும் தவிர ஒன்னக் கட்டிக்கிட்டு என்னத்தக் கண்டேன்? என் கழுத்துக்கு நாலு பவுன் சங்கிலி போடு. உன் பிள்ளைக்கு நாந்தான் அப்பன்னு வாரேன்.”

“வேணாம்யா... குடி கெட்டுப்போகும்.”

“ஏய்... வந்தா நாலு பவுனோட வாடி. இல்லேன்னா வந்த வழியாப் போடி.”

“நான் வெறுஞ் சிறுக்கிய்யா. மஞ்சக் கவுத்தத் தவிர வேற ஒண்ணும் இல்ல என்கிட்ட.”

“சொல்றேன்... சிறுக்கி கத்திக் குமிச்சு ஊரக் கூட்டுறா பாரு?”

ஆடுமேயக்கிற கம்பெடுத்துச் சுத்தி ஒரு வீசு வீசுனான்.

அது அவ நெத்தியில பட்டும் படாம முள்முருங்கை மரத்துல போயி விழுந்துச்சு.

“ஏலேய்... நீ மனுசன் இல்லடா. நான் வாரேன். என் பிள்ளைக்கு அப்பன் நீ இல்லேன்னு சொல்லிட்டுப் போறன்.” கீழ விழுந்த கம்பை எடுத்தா; ஆடுகள ஓட்டிக்கிட்டு வீட்டுக்குப் போயிட்டா.

பவளாங்கி கணக்குப் போட்ட நாலுபவுன் சங்கிலி பொய்யாப் போனதுமில்லாம ஆடுகளையுமில்ல ஓட்டிட்டுப் போயிட்டா அவ பாட்டுக்கு அவ வீட்டுக்கு.

சீ... சொலவம் பொய்யாப் போச்சே! கெணத்துத் தண்ணியக் கொண்டு போயிருச்சே வெள்ளம்.

•••••

ஆடுமேயச்சவன்- பன்னிமேச்சான். இப்ப சாப்பாடும் மரியாதையும் கொஞ்சம் கொஞ்சமாக் குறையுது; துணிமணியும் பொழப்பும் என்னமோ நாறுது.

ஒரு முன்னிருட்டுல பன்னிகள ஓட்டி அடைச்சிட்டுத் தண்ணியில தவுடு கலந்து வச்சிட்டு வீட்டுக்குள்ள வந்து பாத்தா- கயித்துக் கட்டில்ல கவுந்து கெடக்கா பவளங்கி. பெரட்டிப் போட்ட- ‘குப்பு’ன்னு மூஞ்சியில வந்து முட்டுது சாராய வாடை.

“ஏய் இது என்னாடி புதுப் பழக்கம்? ஏதுடி சாராயம்?”

“பன்னி ஏவாரி வந்தாரு; குடிச்சிட்டுக் கொடுத்தாரு”

அவ உளறி உண்மையைச் சொல்லிட்டா.

கொஞ்ச நாள்ல ஊத்திக் கொடுத்தவன்கூட ஓடியும் போனா.

பொண்டாட்டி போயிட்டா; பொண்டாட்டியோட ஆடும் போச்சு; பவளாங்கியும் போயிட்டா; பவளாங்கியோட பன்னியும் போச்சு.

தொழில் அத்துப் போச்சு. பாதி வயசுலயே உடம்புக்கு முக்கா முதுமை வந்துருச்சு. ஊறிப்போன காயிதம் மாதிரி உடம்பும் நிறம் மாறிப் போயிருச்சு. பல ஊர்கள்ல சில்லரை வேலை செஞ்சு செஞ்சு காலமும் ஓடிப்போச்சு. இனி உழைக்க உடம்புல தெம்பு இல்லேங்கறப்ப ஊர் ஞாபகம் வந்திருச்சு.

இன்னும் விடியல. செங்கமங்கலா இருக்கு.

வாழைக்குத் தண்ணி கட்டப் போனாரு கருத்தமாயி. சில ஆளுகளுக்கு நடுமண்டை கழிஞ்சு ஓரஞ்சாரம் மட்டும் கொத்துக்கொத்தா முடி இருக்கும் பாருங்க... அப்படி நடந்து நடந்து நடுவுல வழுக்கையாகிப்போன வரப்போரமா தைமாசப் பனித்துளிக் முட்டை முட்டையாப் படுத்து கெடக்குதுக. அதுகள எழுப்ப மனசு இல்லாம வழுக்கை வழியாவே நடந்து போனாரு கருத்தமாயி.

மழை பேஞ்சா நிலத்துல நீர் எறங்காது- அப்படி மூன்றரை ஏக்கரும் அடைச்சு நிக்குது வாழை.

‘வா(ழ)ை வாழ வைக்குமா பாப்போம்!’

•••••

கிணத்துமேட்டுல யாரோ ஒரு ஆளு வேட்டிய இழுத்துப் பொத்திப் படுத்துருக்கிற மாதிரி தெரிஞ்சுச்சு. இது என்னடா இது என்னைக்குமில்லாத திருநாளா...?

“ஏய் எவன்டா அது எந்தோட்டத்துல? எந்திரிர்றா”

லேசாப் பெரண்டு எந்திரிச்சு, பொத்துக வேட்டிய எடுத்துப் பொத்துனாப்புல உதறி இடுப்புல இறுக்கிக் கட்டிக்கிட்டுக் கருத்தமாய உத்து உத்துப் பாத்துச்சு அந்த உருவம்.

“ஏய் யாரப்பா நீ? எந்த ஊரு?”

“எல்லாம் இந்த ஊருதான்.”

“அதுயாரு அது எனக்குத் தெரியாம இந்த ஊர்ல? யார் வீட்டு ஆளு?”

“எல்லாம் சீனிச்சாமி வீட்டு ஆளு தான்.”

‘சுருக்’குன்னு நெஞ்சுல முள்ளுத்தச்ச மாதிரி ஆகிப் போச்சு கருத்தமாயிக்கு.

ஒரு எட்டு முன்னுக்கு வந்தவரு அவன் மூஞ்சிய உத்து உத்துப் பாத்தாரு.

பரட்(டை)டத் தலைக்குள்ள-செரைக்காத மூஞ்சிக்குள்ள- அழுக்கு வேட்டி சட்டைக்குள்ள நுழைஞ்சு ஒரு முப்பது வருசம் பின்னுக்க- பின்னுக்கப் போறாரு.

கண்ணுக்குள்ள கலங்கலாத் தெரியுது ஒரு உருவம். பனி லேசா வெலகி அந்த மூஞ்சியில ஒரு வெளிச்சம் விழுகுது.

“தெரியலையா கருத்தமாயி?”

“யண்ணே நீ சுழியன்தான?”

அண்ணன் தம்பி ரெண்டுபேரும் கலகலன்னு கண்ணீர் விட்டுக் கட்டிப் புடிச்சு விம்மி விசும்பித் தொட்டுத் தொட்டுப் பாத்துத் துடிக்கிறாக.

“யண்ணே! நீ உசுரோட இருப்பேன்னு நான் நெனைக்கலண்ணே.”

“நீயும் செயிலை விட்டு வருவேன்னு நானும் நெனைக்கலடா தம்பி. பின்னிப் பிணையுதுக பாவம் பிரிஞ்ச உசுருக.”

பத்தே நாள்ல தோட்டத்துல பங்கு கேட்டான் சுழியன். நெறஞ்ச மனசோட- நெறஞ்ச வெள்ளாமையோட சரிபாதி நெலத்தப் பிரிச்சுக் கொடுத்தாரு கருத்தமாயி.

ஆளுக்கு ஒண்ணே முக்கா ஏக்கரு; புறம்போக்கும் ரெண்டு பங்கு. சாமி மரங்களோட ரோட்டோரத்து வெளிப் பங்கு கருத்தமாயிக்கு; உள்பங்கு சுழியனுக்கு.

தார் பேர்ட்ட வாழைத்தோட்டத்த அடுத்த மாசமே ஒத்தி வச்சு ஊரெல்லாம் சுத்திக் காசைக் கரியாக்கிட்டுத் தம்பி வீட்டுத் திண்ணையில அன்னைக்கு வந்து விழுந்தவன்தான் சுழியன்; இன்னும் எந்திரிக்கல.

அழுக்கு வேட்டியில ஒரு ஓரம் எடுத்து அழுத கண்ணத் தொடச்ச கருத்தமாயி திண்ணையில பொத்திப் படுத்துக் கிடந்த சுழியன நிமிந்து பாத்தாரு.

“பொண்டாட்டிய நீ வச்சுப் பொழைக்கல. பவளாங்கி ஒன்னிய வச்சுப் பொழைக்கல. உழுத நெலத்தயும் விட்டுட்ட; ஒடம்புல தெம்பையும் எழந்துட்ட; இப்பப் படுக்கத் திண்ணையும் இல்லாமக் கெடக்க. பெத்தவன் என்னத் தூக்கி எறிஞ்சுட்டான்; பெறந்தவன நான் தூக்கி எறிய முடியுமா? சொமக்கிறண்ணே; சொமக்கிறேன். உனடஉசுரு உள்ள மட்டுமோ, என் உசுரு உள்ள மட்டுமோ! உன்னையும் தூக்கிச் சொமக்கறேன். கொஞ்சங் கொஞ்சமாக் கடன் குறையும்னு பாத்தா- கொஞ்சங் கொஞ்சமாக் கடன் கூடுதே... கழுத்து வரைக்கும் தண்ணி வந்தா சமாளிக்கலாம்; மூக்குவரைக்கும் ஏறி மூச்சு முட்டுதே. நெஞ்சுல ‘தம்மு’ இருக்கிற வரைக்கும் நீச்சலடிச்சுப் பாப்பம்.”

நீளமா ஒரு பெருமூச்சு விட்டு நிமிந்து உட்காந்தாரு கருத்தமாயி.

அப்பன் பட்ட பாட்டையும், அப்பன அண்ணன் படுத்துற பாட்டையும் நெனச்சு நெனச்சுக் கண்ணீர வெளிய காட்டாம அழுது, கைக்குட்டையெடுத்துக் கண்ணத் துடைச்சிக் கிட்டான் சின்னப்பாண்டி. (தொடரும்)



**கால வித்தியாசம்**


ஓடை நீரில்
மீன்கள் பின்னால்
ஓடித் திரிந்தது ஒரு காலம்
கோடை மணலில் கால்கள் வெந்து
குழைந்து போனது ஒரு காலம்
ஈசாப் நீதிக்கதைகளுக்குள்ளே
இதயம் கரைந்தது ஒரு காலம்
பேசாதிருக்கும் பிரபஞ்சமே
ஒரு புத்தகமானது ஒரு காலம்
சில்லிப்பூக்களில் தேனைத் தேடித்
துள்ளித்திருந்தது ஒரு காலம்
எல்லாம் இருந்தும் நேரமில்லாமல்
எட்டித் தள்ளுவ தொரு காலம்

-வைரமுத்து-

# மூன்றாம் உலகப்போர்

**26**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



## தண்ணி போற வழி ஓடம் போற மாதிரி, விதிபோற வழி போகுதய்யா பொழப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அழுத்தங்கள் மஹிந்த மீதே!- கிரியெல்ல

இலங்கையில் வாழும் சிறுபான்மை இன மக்களினால்தான் நாட்டில் பிரச்சினை தலை தூக்கியுள்ளது என்று சர்வதேச நாடுகளுக்கு காட்டுவதற்காகவே உள்நாட்டில் இனவாத முரண்பாட்டை அரசாங்கம் உருவாக்கி வருகின்றது. இதற்கு பௌத்த மக்கள் இடமளிக்கக்கூடாது. ஜெனீவா தீர்மானங்கள், சர்வதே நெருக்கடிகள் என்பன மஹிந்த அரசுக்கு எதிரானதே தவிர இலங்கைக்கு எதிரானது அல்ல என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற படுகொலைகள், சரணடைந்தோரின் நிலை, காணாமற்போனோர் மற்றும் வெள்ளை வானில் கடத்தப்பட்டோர் விவகாரம் உட்பட சர்வதேச குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இது வரையில் அரசு விசாரணையெதையும் முன்னெடுக்கவில்லை.

ஆனால், மனித உரிமையை மீறக்கூடிய வகையில் 48 மணி நேரம் தடுத்து வைக்கும் சட்டத்தினை நிறைவேற்றியுள்ளது. அரசின் இத்தகைய செயற்பாடுகளினால் பெரும் நெருக்கடிகளையே அரசு சந்திக்கும் என்றார். நாட்டில் பெரும் கடன் அதிகரித்துள்ளது. இவ்வருடத்தில் இலங்கை பொருளாதார ரீதியாக பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும்.

இதனால் பொதுமக்கள் வாழ்வாதார பிரச்சினைகளை காரணம் காட்டி போராட்டங்களை முன்னெடுப்பர். இவ்வாறான போராட்டங்களை தடுக்கவே அரசு 48 மணி நேரம் தடுத்து வைக்கக்கூடிய புதிய சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

இலங்கையில் வாழ முடியாத நிலையிலேயே பெரும்பாலானோர் நாட்டை விட்டு தப்பிச் செல்கின்றனர். ஜெனீவாத் தீர்மானம் நாட்டின் நல்லாட்சியை உறுதிப்படுத்தவே முன்வைக்கப்பட்டது. இதற்கு அரசு போலி தேசப்பற்றைப் பயன்படுத்தி வேறு அர்த்தம் கொடுத்து வருகின்றது என்றார். (செ-2)

# குடியிருப்பின்றிய வீடுகளால் சமூக சீர்கேடுகள் அதிகரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விஸ்வமடு மேற்கு, விஸ்வமடு கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவில் உள்ள அனைத்து மக்களும் மீள்குடியமர்ந்த போதும் பலர் இங்கு பதிவுகளை மேற்கொண்டு விட்டு யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் குடியிருப்பதால் அவர்களது வீடுகள் பாழடைந்து காணப்படுகின்றன.

இவ்வாறு பதிவுகளை மேற்கொண்டு விட்டு வேறு இடங்களுக்கு சென்று குடியிருப்பதால் வீடுகள் பாழடைந்தும் காணிகள் பற்றைக் காடுகளாகவும் காணப்படுகின்றன.

இதனால் சமூக சீர்கேடுகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-3-263)

# நாட்டிற்கு ஏற்பட்ட களங்கத்திற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்- சரத்

ஆட்சியாளர்களே இந்த நாட்டுக்கு களங்கத்தை ஏற்படுத்தி வருவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் கீர்த்தி நாமத்திற்கு களங்கம் ஏற்படுத்திய பொறுப்பினை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க சட்டவிரோதமான முறையில் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவே பொறுப்பு வாய்ந்த நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையினால் நாட்டின் நற்பெயருக்கு பங்கம் ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். பொதுநலவாய நாடுகள் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை நீக்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் ஓர் நிலையை நாடு அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் நாடு எதிர்நோக்கி வரும் அவப் பெயருக்கு எ[illegible]ச்சதிகார போக்கில் ஆட்சி நடத்தும் தரப்பினரே பொறுப்பு சொல்ல வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். (செ-2)

# இரு மொழிகளில் தேசியகீதம் இசைக்கப்படுவது முறையல்ல

## வாசுவின் கருத்துக்கு ஹெல உறுமய பதில்

(கொழும்பு)

இரு மொழிகளில் தேசிய கீதம் இசைப்பது அரசியல் சாசன மீறலாகும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

தேசிய நிகழ்வுகளின் போது தேசிய கீதத்தை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பாடும் திட்டமானது அரசியல் சாசனத்திற்கு புறம்பானது என தெரிவித்துள்ளது.

தேசிய நிகழ்வுகளின் போது இலங்கையின் பூர்வீக மொழியான சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டுமென அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சிங்களமொழி மட்டுமே இலங்கையிலிருந்து உருவானது எனவும் தமிழ் மற்றும் ஏனைய மொழிகள் இலங்கையில் உருவாகவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, சுதந்திர தினம் போன்ற தேசிய நிகழ்வுகளின் போது சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் முக்கிய தமிழ் நிகழ்வுகளின் போதும் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுவதில் தவறில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுவதனால் தமிழ் மக்களுக்கு அதன் அர்த்தங்களை புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இக்கருத்து தனிப்பட்ட கருத்து எனவும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து கட்சியின் நிலைப்பாடு வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேசிய நிகழ்வுகளின் போது தேசிய கீதம் இரண்டு மொழிகளிலும் பாடப்பட வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் யோசனைத் திட்டமொன்றை முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-2)

# இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள[illegible] விபரங்களை வெளியிட முடியாது!

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் பற்றிய தகவல்களை வெளியிட முடியாது என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் இது வரையில் இராணுவச் சேவையிலிருந்[illegible] தப்பிச் சென்றவர்கள் பற்றிய தகவல்களை வழங்குவதன் மூலம் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம்.

எனவே, இந்தத் தகவல்களை வெளியிட முடியாது. கைது செய்யப்பட்ட நபர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய தகவல்களையும் வழங்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-2-9)

# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 24 பேர் பாதுகாப்பாக மீட்பு!

(மண்டூர்)

கிழக்கில் பெய்து வரும் அடைமழை வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்ட வாகனம் ஒன்று நேற்று அதிகாலை 5 மணியளவில் வெல்லாவெளி பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவின் மண்டூர்-வெல்லாவெளி வீதியில் கறுத்தப் பாலத்துக்கு அருகே வெள்ள நீர் பாய்வதால் மத்திய முகாமிலிருந்து அநுராதபுரம் செல்வதற்காக இவ்வீதியால் வந்த வாகனமொன்று வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

கிராம மக்களின் உதவியுடன் வெல்லாவெளி பொலிஸார் வாகனத்தை மீட்டதுடன் அதில் பயணித்த 24 பேரையும் காப்பாற்றியுள்ளதாக களுவாஞ்சிக்குடி பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த லியனகே தெரிவித்தார். மீட்கப்பட்டவர்களில் 8 குழந்தைகளும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-2)


# போருக்கு பின்னரும் வடக்கில் கைதுகள் தொடர்கின்றன-ஜே.வி.பி.

அரசாங்கம் தொடர்ந்தும் வடக்கு மக்களை கைதுசெய்து வருவதாக ஜே.வி.பி. கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. யுத்தம் நிறைவடைந்து மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் வடக்கு மக்கள் கைது செய்யப்படுவதாக ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் யாழ்ப்பாணத்தில் பல தமிழர்களை கைது செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர்களில் அதிகமானவர்கள் 50 வயதுக்கும் அதிகமானவர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எந்தவிதமான காரணங்களும் இன்றி பொதுமக்களை இராணுவத்தினர் கைது செய்வதானது பாரிய மனித உரிமை மீறலாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கைது செய்யப்படுவோர் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பார்வையிடச் செல்லும் உறவினர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுவதாகத் தெரிவித்துள்ளார். இதேவேளை, வடக்கில் பொதுமக்களை இராணுவத்தினர் கைது செய்யவில்லை என இராணுவப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

சிலவேளைகளில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தேடுதல் வேட்டைகளை மேற்கொண்டு சிலரை கைது செய்திருக்கலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, கடந்த சில மாதங்களில் 42 பயங்கரவாத சந்தேக நபர்கள் வடக்கில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார். (செ-2)





வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வுகள் அண்மையில் நடத்தப்பட்டன. இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந.திருலிங்கநாதன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதி[illegible] உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாக்கனிக்கு கொட்டாவிதான்?

## இந்தியாவின் போக்கில் பெரிய மாற்றம் இல்லை..



"இலங்கை தொடர்பான கொள்கையை இந்தியா மாற்றிக்கொள்ள வேண்டும், அவ்வாறு மாற்றினால்தான், இலங்கையின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்" என்று அண்மையில் த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர் (சுரேஸ் பிரேமச்சந்திரன்) தெரிவித்திருந்தார்.

எட்டாவது, இந்திய-இலங்கை கூட்டுக்குழு கூட்டத்துக்காக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடந்த திங்கட்கிழமை, புதுடெல்லிக்குப் புறப்பட்ட சமயத்தில்தான், த.தே.கூ மக்கள் பிரதிநிதியின் இந்தப்பேட்டி ஊடகங்களில் வெளியானது.

மிக முக்கியமான தருணமொன்றில் இக்கருத்து வெளியாகியுள்ளது. பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னணி, அதுபற்றி இந்தியா தப்பித்தவறிக்கூட வாய்திறக்காத சூழல், வெளிவிவகார அமைச்சர் ஜ.எல். பீரிஸின் புதுடெல்லிப் பயணம், அடுத்த மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22வது கூட்டத்தொடர் என்ற பல்வேறு வழிகளிலும் முக்கியமானதாகக் கருதப்படும் சூழலில்தான் இந்தக் கருத்து வெளியிடப்பட்டது.

ஒருவகையில் சொல்லப்போனால், இது இந்தியாவின் மௌனத்தை உடைக்கும் நோக்கத்தை, ஜி.எல். பீரிஸ்-சல்மான் குர்ஷித் சந்திப்பில் இலங்கையின் வலைக்குள் இந்தியா வீழ்ந்துவிடக் கூடாதே என்ற எதிர்பார்ப்பு உள்ளதை அவரது இந்தக் கருத்து புலப்படுத்தியுள்ளது.

த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர் கூறியிருப்பதுபோலவே இலங்கை தொடர்பாக இந்தியா கடைப்பிடித்து வரும் கொள்கையே, அதன் மெத்தனப் போக்கிற்கு காரணமாகியுள்ளது. முதலில் விடுதலைப்புலிகளை அழித்துவிட்டு, அதன் பின்னர் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று இந்தியாவுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தது இலங்கை அரசாங்கம். போர் முடிவுக்கு வந்த பின்னர், அந்த வாக்குறுதி மட்டுமன்றி இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்ட இன்னும் எத்தனையோ வாக்குறுதிகளை இலங்கை காப்பாற்றவில்லை. ஆனாலும் இந்தியாவின் அணுகுமுறையில் பெரியளவிலான மாற்றம் எதையும் காண முடியவில்லை.

2009 மே மாதம் முடிவுக்கு வந்த போரை அடுத்து இலங்கை தொடர்பாக இந்தியா கடைப்பிடித்துவரும் கொள்கைக்கு விதிவிலக்காக இடம்பெற்ற ஒரே சம்பவம் என்றால், கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்ததேயாகும். இதற்கு முன்னரும் சரி, பின்னரும்சரி- இலங்கையுடன் இந்தியா முட்டிக் கொள்ளவில்லை. அதிகம் பேசிக் கொள்ளவும் இல்லை.

ராஜீவ் வாந்தி கொலைக்குப் பின்னர் பலகாலமாக இந்தியா கடைப்பிடித்துவந்த கண்டும்காணாத போக்கிலேயே இந்தியா இருந்து வருகிறது.

அண்மையில் பிரதம நீதியரசரை சர்ச்சைக்குரிய வகையில் அரசாங்கம் பதவி நீக்கியபோது, உலகெங்கும் இருந்து கண்டனங்கள் எழுந்தபோதிலும் அயல்நாடான இந்தியா மட்டும் வாயைத் திறக்கவில்லை. இந்த மெத்தனப்போக்கே இலங்கை அரசு, தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அக்கறையற்றிருப்பதற்குக் காரணம் என்ற கருத்து அரசியல் மட்டங்களில் வலுவாகவே உள்ளது.

விடுதலைப்புலிகள் காலத்துக் கொள்கையை இந்தியா மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு மாற்றிக் கொண்டால்தான், இலங்கையை அதன்போக்கில் இருந்து மாற்றிக் கொள்ள முடியும் என்று த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

போர் முடிவுக்குவந்து நான்கு ஆண்டுகளாகியும் அரசியல்தீர்வு கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளதற்கும், அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதுள்ளதற்கும் காரணம்,. இந்தியா தனது கொள்கையை மாற்றிக்கொள்ளாததே என்று மறைமுகமாகக் குற்றம் சாட்டியுள்ளார் த.தே.கூ. கட்சியைச் சார்ந்த மக்கள் பிரதிநிதி.

இப்போது இந்தியாவின் பிரச்சினை வேறுவிதமானது. விடுதலைப் புலிகளை இந்தியா எதிரியாகப் பார்த்தது. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது- விடுதலைப்புலிகளின் வளர்ச்சியும் பலமும். இந்தியாவின் மாநிலங்களிடையே தனியே பிரிந்து போகும் எண்ணத்தைத் தூண்டிவிட்டுவிடும் என்ற அச்சம். இது இப்போது எழுந்ததல்ல, கிட்டத்தட்ட 1980களின். இறுதிப்பகுதியிலேயே அது ஆரம்பித்துவிட்டது.

இரண்டாவது- ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்கள் என்ற பழியுணர்ச்சி. இந்த இரண்டும்தான் புலிகளுக்கு எதிரான போருக்கு இலங்கை அரசுக்கு, இந்தியா துணைநிற்கக் காரணம்.

இரண்டு விதங்களில் தலைவலியாக இருந்த புலிகளை அழிப்பதற்கு இலங்கை முன்வந்தபோது, அதை இந்தியா ஆர்வத்துடன் ஆமோதித்தது. ஆனால், கிணறு வெட்டப் பூதம் கிளம்பும் என்று இந்தியா அப்போது எதிர்பார்த்திருக்கவில்லை என்றே கூறலாம்.

அதாவது, அப்போது இலங்கைக்கான சீனாவின் இராணுவ உதவிகள் குறித்து இந்தியா கவலை கொண்டிருந்த போதிலும், அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. போர் முடிந்தபின்னர், சீனாவின் தலையீடு எல்லாம் சரியாகிவிடும் என்ற நினைப்பில், இருந்த இந்தியாவுக்கு அதன் பின்னர்தான் சீனா நிரந்தரமாகவே காலூன்றப்போகிறது என்ற உண்மை விளங்கியது. இப்போது இலங்கையில் இந்தியாவை விடவும் செல்வாக்குச் செலுத்தும் சக்தியாக சீனாவே வளர்ந்து நிற்கிறது.

போர் முடிவுக்கு வந்தபின்னர், சர்வதேச அரங்கில் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட இலங்கைக்கு பாதுகாப்புக் கவசம் ஒன்று தேவைப்பட்டது. சீனா அந்தக் கவசத்தை அளித்தது. இலங்கையை இன்னும் தனக்கு நெருக்கமாக்கிக் கொண்டது.

இந்தியாவினால் அந்தக் கவசத்தை இலங்கைக்கு அளிக்க முடியவுமில்லை. இலங்கையை தன் கட்டுக்குள் வைத்திருக்கவும் முடியவில்லை. இலங்கை அரசு முன்னர் புலிகளைத் துருப்புச் சீட்டாகப் பாவித்து இந்தியாவை மடக்கியது. இப்போது அதற்குப் பதிலாக சீனாவைப் பாவித்துக்கொள்கிறது.

இந்தியாவைப்போல அரசியல் தீர்வு, தமிழ் மக்களின் உரிமைகள், மனித உரிமைகள், ஜனநாயகம், ஊடக சுதந்திரம்-இதுபோன்ற எதைப் பற்றியுமே வாய்திறந்து கண்டிக்காத நண்பனாக சீனா- இருக்கிறது. ஆனால், இந்தியாவால் இப்படி இருக்க முடியாது.

இப்போது இந்தியாவுக்கு உள்ள சிக்கல் இதுதான்- இலங்கை அரசை வழிக்குக் கொண்டு வரவேண்டுமானால், சீனாவிடம் இருந்து அதனை பிரிக்க வேண்டும். இது முடியக்கூடிய காரியம் இல்லை. அந்தக் காலகட்டம் கடந்துபோய்விட்டது. இதனால், முடிந்தவரை இலங்கையுடன் முரண்படாமல் இருந்து கொள்ளப்பார்க்கிறது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவி நீக்கப்பட்ட விவகாரத்தில், இந்தியாவுக்கு உடன்பாடு இருக்கவில்லை என்றே தெரிகிறது. ஆனால், வாய்திறக்கவில்லை ஏனென்றால், இலங்கை அரசாங்கம் உள்நாட்டு விவகாரங்களில் யாரேனும் கருத்துச் சொல்வதை உள்வாங்குவதும் இல்லை. ஏற்றுக்கொள்வதும் இல்லை. அப்படிப்பட்ட நிலையில் வாயைத் திறந்து கண்டித்து வாங்கிக் கட்டிக்கொள்வதைவிட- இப்போதுள்ள அந்நியப்பட்ட நிலை அல்லது இடைவெளி இன்னும் அதிகரிப்பதை தவிர்ப்பதற்காகவே இந்தியா ஒதுங்கி நின்றது.

எனினும், குற்றப்பிரேரணையை எதிர்த்த மூத்த அமைச்சர் டி.யு.குணசேகரவுக்கு இந்திய அரசியல் தலைவர்களிடம் இருந்து கிடைத்த பாராட்டு, இந்தியாவுக்கு நீதியரசர் ஷிராணி மீதான குற்றப்பிரேரணையில் உடன்பாடு இல்லை என்பதை உணர்ந்து கொள்ளப் . போதுமானது.

இத்தகைய பின்னணியில்தான், இலங்கை தொடர்பான கொள்கையை இந்தியா மாற்றக்கொள்ள வேண்டும் என்று த.தே.கூ மக்கள் பிரதிநிதி (சுரேஸ்) கூறியுள்ளார்.

அதாவது விடுதலைப்புலிகள் காலத்துக் கொள்கையை உதறிவிடுமாறு அவர் கேட்டுள்ள போதிலும், இந்தியா அத்தகைய மாற்றம் ஒன்றுக்குத் தயாராக இல்லை என்பதே உண்மை ஏனென்றால், இப்போது புலிகள் இல்லாமல் போயிருக்கலாம். ஆனால், இலங்கை மீதான இந்தியாவின் நலன் அதற்கு முக்கியமானது.

எனவே, கொழும்பு தொடர்பான கொள்கையை மாற்றிக்கொண்டு அதனுடன் முரண்போக்கில் செல்வதற்கு இந்தியா தயாராக இல்லை. ஏனென்றால், அது சீனாவை மேலும் பலப்படுத்திவிடுவதாக அமைந்துவிடும். விடுதலைப்புலிகள் விவகாரத்தில் இந்தியா கற்றுக்கொண்ட பாடம் அது.

இந்தியா இன்னொரு பொறிக்குள் விழாமல் தப்பிக்கொள்ள வேண்டுமானால், விடுதலைப்புலிகள் காலத்துக் கொள்கையைத் தொடருவதைத் தவிர்க்க முடியாது. அது தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தடங்கலாகவே நிச்சயம் இருக்கும். அதைப்பற்றி இந்தியா கவலைப்படப் போவதில்லை.

ஏனென்றால், இந்தியாவுக்குகோ, அமெரிக்காவுக்கோ அல்லது வேறெந்த நாட்டுக்கோ, முதலில் தமது நலன்கள் தான் முக்கியமே தவிர, தமிழர்களின் நலன் அல்ல.

கே.சஞ்சயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவுதி பணிப்பெண்ணுக்கு வயது 25; சிங்கப்பூர் பணிப்பெண்ணுக்கு வயது 21

### பணிப்பெண்ணாக செல்பவர்களுக்கு வயது வரையறை

இலங்கையில் இருந்து சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்களாக செல்வோருக்கான வயது எல்லை குறைந்தது 25 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கின் ஏனைய ஏழு நாடுகளுக்கு செல்லும் பணிப் பெண்களுக்கான வயது 23 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சவுதிக்கு குறைந்த வயதில் பணிப் பெண்ணாக சென்று குழந்தைக்கு புட்டிப்பால் ஊட்டியபோது அதனை கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட ரிஸானா நபீக் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டமையை அடுத்தே இந்த நடைமுறை அமுலுக்கு வருகிறது.

இதேவேளை, சிங்கப்பூர், ஹொங் கொங், மலேசியா, சைப்பிரஸ் ஆகிய நாடுகளுக்கான பணிப்பெண்களின் வயதை 21 ஆக வரையறுக்க இலங்கையின் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களை வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக அனுப்புவது சம்பந்தமாகப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இதனால் அவ்வப் போது அது தொடர்பான சட்டங்களில் மாற்றம் செய்யப்படுகின்றது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

சவுதி உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பணிப் பெண்களுக்கான பயிற்சிக்காலம் 21 தினங்களாகவும் சிங்கப்பூர் உட்பட்ட நாடுகளுக்கு செல்பவர்களுக்கான பயிற்சிக்காலம் 30 தினங்களாகவும் நிர்மாணிக்கப்பட்டது எனவும் அமைச்சர் தெரிவித்தார். (2-9)

## 2010 ஜனாதிபதி தேர்தலின் வாக்கு சீட்டுக்கள் மீட்பு

இலங்கையில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்படுள்ளன.

இவ்வாக்கு சீட்டுக்கள் கம்பஹா, கொழும்பு, கண்டி வீதிக்கு அருகாமையில் உள்ள நிட்டம்புவ கலகெடிஹேன பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட இந்த அனைத்து வாக்குச் சீட்டுக்களிலும் பொதுவான எதிர்க் கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்டிருந்தன.

நூறு வாக்குச் சீட்டுக்கள் என்ற அடிப்படையில் கட்டப்பட்ட ஆறுக்கும் மேற்பட்ட கட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லும் தாய்மார் இந்த வாக்குச் சீட்டுக்களை கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நுவரெலியா மாவட்டம் என இந்த வாக்குச் சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் ஆரம்பித்துள்ளதாக சிங்கள ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (2-9)

## புத்தாண்டு காலத்தில் பொருட்களின் விலை உயரும்

### லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு

புத்தாண்டு காலத்தில் பொருட்களின் விலைகள் மேலும் உயர்வடையும் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் 15 தொடக்கம் 25 வீதம் வரையில் உயர்வடையும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

மக்களிடம் வரி அறவீடு செய்வதனைத் தவிர வேறும் எந்தவொரு வருமான வழியும் அரசாங்கத்திற்கு கிடையாது. ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் இறக்குமதி செலவுகள் பாரியளவில் உயர்வடைந்துள்ளன.

இளைஞர்கள் தொழில் வாய்ப்பு இன்றி அல்லலுறுகின்றனர். இதன் காரணமாகவே உயிரைப் பணயம் வைத்து அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக படகு மூலம் செல்கின்றனர்.

இந்த ஆண்டு இறுதியில் நாடு பாரியளவில் பொருளாதார நெருக்கடிகளை சந்திக்க நேரிடும் என்பதனை இந்த அரசாங்கம் தெரிந்து கொண்டுள்ளது.

தொழில் வாய்ப்பின்மை, வாழ்க்கைச் செலவு மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு போன்ற காரணிகளுக்கு அரசாங்கத்திடம் பதிலில்லை என அவர் தெரிவித்துள்ளார். (2-9)

## வர்ண மழை குறித்து ஆராய ஆய்வாளர்கள் இலங்கை வருகை

(கொழும்பு)

இலங்கையில் பெய்து வரும் வர்ண மழையை ஆராயும் முகமாக அமெரிக்க மற்றும் பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகைதரவுள்ளதாக இலங்கை மருத்துவ ஆராய்ச்சி கழக பணிப்பாளர் அனில் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது விஜயத்தின் பின்னர் குறித்த ஆராய்ச்சியாளர்கள் வர்ண மழை தொடர்பாக தமது அறிக்கையை சமர்ப்பிப்பர் என்று சமரநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஹாவாட் மற்றும் பக்கிங்காம் செயார் பல்கலைக்கழகத்தால் வர்ண மழை தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை.

எனினும் ஏற்கனவே பொலநறுவையில் பெய்த வர்ண மழையில் நுண்ணங்கிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டமையை சமரநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (2-9)




★ 1340 - இங்கிலாந்து மன்னன் மூன்றாம் எட்வர்ட் பிரான்சின் மன்னனாக அறிவிக்கப்பட்டான்.

★ 1500 - விசெண்ட் யானெஸ் பின்சோன் பிரேசில் நாட்டில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்.

★ 1531 - போர்த்துக்கல், லிஸ்பன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

★ 1565 - கர்நாடக மாநிலத்தின் தலைக் கோட்டை என்ற இடத்தில் விஜய நகரப் பேரரசுக்கும் இஸ்லாமிய தக்காணத்து சுல்தான்களுக்கும் இடையில் இடம்பெற்ற சமரில் கடைசி இந்துப் பேரரசு தோல்வி கண்டது. இத்தோல்வி இந்தியாவின் பெரும் பகுதி இஸ்லாமியரின் கட்டுப் பாட்டுக்குள் வரக் காரணியாய் இருந்தது.

★ 1788 - ஆர்தர் பிலிப் தலைமையில் பிரித்தானியக் கைதிகளின் முதலாவது தொகுதியைக் கொண்ட கப்பல் சிட்னியை அடைந்து புதிய குடியேற்றத்தை ஆரம்பித்தனர். இது அவுஸ்திரேலிய நாளாகக் கொண்டாடப்படுகிறது.

★ 1837 - மிச்சிகன் ஐக்கிய அமெரிக்காவின் 26 ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.

★ 1841 - ஐக்கிய இராச்சியம் ஹொங் கொங்கை அதிகாரபூர்வமாக ஆக்கிரமித்தது.

★ 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: லூசியானா மாநிலம் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து விலகியது.

★ 1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியா அமெரிக்கக் கூட்டணியில் மீண்டும் இணைந்தது.

★ 1924 - சென் பீட்டர்ஸ்பேர்க் லெனின் கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.

★ 1926 - ஜோன் லோகி பெயர்ட் தொலைக் காட்சிப் பெட்டியைக் காட்சிப் படுத்தினார்.

★ 1930 - இந்திய தேசியக் காங்கிரஸ் ஜனவரி மாதம் 26ஆம் திகதியை இந்தியாவின் விடுதலை நாளாக அறிவித்தது.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படையினர் முதற் தடவையாக ஐரோப்பாவை (வட அயர்லாந்து) அடைந்தனர்.

★ 1949 - அவுஸ்திரேலியக் குடியுரிமை முதன் முறையாக வழங்கப்பட்டது.

★ 1950 - இந்தியா குடியரசு நாடானது. ராஜேந்திர பிரசாத் அதன் முதலாவது ஜனாதிபதியானார்.

★ 1952 - பிரித்தானிய மற்றும் எகிப்திய உயர் வகுப்பு வர்த்தகர்களுக்கெதிராக எகிப்தில் இடம்பெற்ற வன்முறைகளில் கெய்ரோ நகரத்தின் நடுப்பகுதி தீயினால் சேதமாக்கப்பட்டது.

★ 1962 - ரேஞ்சர் 3 விண்கலம் சந்திரனை ஆராய்வதற்காக விண்ணுக்கு ஏவப்பட்டது. ஆனாலும் இத் தளவுளவி 22ஆயிரம் மைல்களால் சந்திரனைத் தவறவிட்டது.

★ 1965 - இந்தி இந்தியாவின் அதிகார பூர்வ மொழியானது.

★ 1980 - இஸ்ரேலும் எகிப்தும் தூதரக உறவை ஆரம்பித்தன.

★ 1983 - லோட்டஸ் 1-2-3 வெளியிடப்பட்டது.

★ 1992 - ரஷ்யாவின் அணுவாயுத ஏவுகணைகள் ஐக்கிய அமெரிக்க நகரங்களை நோக்கி செலுத்தப்படமாட்டா என ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் அறிவித்தார்.

★ 2006 - வெஸ்டர்ன் யூனியன் நிறுவனம் தொலைத்தந்தி மூலமான தனது சேவைகளை நிறுத்திக் கொண்டது.

### பிறப்பு

★ 1977 - வின்ஸ் கார்டர், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

★ 1823 - எட்வர்ட் ஜென்னர், ஆங்கிலேய மருத்துவர், அம்மை நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடித்தவர் (பி.1749)

★ 1895 - ஆர்தர் கெய்லி, கணிதவியலர் (பி. 1821)

★ 1964 - தோமஸ் அடிகள், யாழ்ப்பாணம் தோலகட்டி ஆச்சிரம சுவாமிகள் (பி. 1886)


★ 2008 - ஜோர்ஜ் ஹப்பாஷ், பாலஸ்தீன ஜனாதிபதி (பி. 1926)

### சிறப்பு நாட்கள்

★ உலக சுங்கத்துறை தினம்

★ இந்திய குடியரசு தினம் (1950)

### ஆர்தர் கெய்லி



ஆர்தர் கெய்லி பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த கணிதவியளார்களில் ஒருவராவார். ஸில்வெஸ்டருடன் சவட்டாகப் பல கணித ஆய்வுகள் நடத்தியவர். ஸில்வெஸ்டரைப்போல் கணிதத்தின் பல பிரிவுகளிலும் தன் முத்திரையைப் பதித்தவர்.

**கல்லூரிப் படிப்பு**

ஆர்தர் 17 ஆவது வயதிலிருந்து புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் ட்ரினிடி கல்லூரியில் கணிதம் பயின்றார். அவருடன் சவப்பயின்ற மாணவர்கள் அவரை ஒரு கணித வல்லுநராகவே மதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மகா வித்தியாலயத்தை முன்னேற்ற வழி செய்யுங்கள்!

## வளங்களை அபிவிருத்தி செய்ய பெற்றோர் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயம் பல்வேறு குறைபாடு களுடன் இயங்கி வருவதாக மாணவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1934 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது 1990ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதால் மூடப் பட்டு 22ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வருகின் றது. தரம் 1தொடக்கம் க.பொ.த சா/த.வரை யுள்ள இப்பாடசாலையில் 307 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இதில் தரம் 6 தொடக்கம் க.பொ.த.சா/த வரையுள்ள வகுப்புக்களுக்கு நிரந்தர ஆங் கில ஆசிரியர் இன்மையால் ஆங்கில அறிவை பெறமுடியாத நிலை காணப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம், விவ சாயம், மனையியல், சித்திரம், சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்களுக்கு செயற் பாட்டு அறை இல்லை.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கு கணிதம், தகவல் தொழில் நுட்பம், புவியியல், விவசாயம், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கு நிரந்தர ஆசிரியர் இன்றி மாணவர்கள் அவதியுறுகின்றனர்.

விஞ்ஞான பாடத்திற்கு இரு ஆசிரியர்கள் தேவைப்படும் பொழுது ஒரு விஞ்ஞான ஆசி ரியரே கடமையாற்றுகின்றார்.

முறையான நூல்நிலையம் இல்லை. சில நூல்களே அங்கு உண்டு.நூலக உதவியாள ரும் இப்பாடசாலைக்கு இல்லை. வெளிமாவ ட்டத்திலிருந்து 9 ஆசிரியர்கள் இப்பாடசா லைக்கு வருகை தருகின்ற போதும் அவர்க ளுக்கான மலசலகூடம் என்பன இல்லை.

மின்சாரவசதி காணப்படுகின்ற நிலை யிலும் கணனி வசதி இல்லை.கணனி ஆசிரி யரும் இல்லை.சுற்றுவேலி இன்மையால் கால்நடைகள் பாடசாலை வகுப்பறைகளை நாசம் செய்கின்றன.

சுமார் 9 வகுப்பறைகள் தேவைப்படுகின்ற போது 6 வகுப்பறைகளே காணப்படுகின் றன.

உணவுக்களஞ்சிய அறை, வாகன தரிப் பிடம், ஆசிரியர் ஓய்வு அறை என்பனவும் இல்லை.

அத்துடன் அதிபர் அலுவலகம், பிரார்த் தனை மண்டபமும் இதுவரை அமைக்கப்பட வில்லை.

இதைவிட பாடசாலை வீதிக்கு மஞ்சள் கடவை அமைக்கப்படாமையினால் மாணவர் கள் விபத்துக்களை எதிர்கொள்ள வேண் டியுள்ளது.விளையாட்டு உபகரணம் இல்லை.

எனவே உரிய தரப்பினர் உடன் விரைந்து தேவைகளை பூர்த்தி செய்து மாணவர்களது கல் விக்கு உதவுமாறு மாணவர்களது பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(செ-3-267)

# ஓடும் ரயில் முன் பாய்ந்து இளைஞன் தற்கொலை

பொல்பித்திகம சியம்பலன்கம ரயில் நிலையத்திற்கு அருகில் ஓடும் ரயிலில் பாய்ந்து 19 வயது இளைஞன் உயிரிழந் துள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இவர் கல்கிரியாகம-பலாகல பிரதே சத்தைச் சேர்ந்தராவார்.

குறித்த இளைஞன் ரயிலில் பாய்ந்து படுகாயம் அடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது இளைஞர் உயிரிழந்துள்ளார்.

பொலிபித்திகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (செ-2-9)

# சர்வதேச பாதுகாப்பு மாநாடு செப்டெம்பரில் நடைபெறும்

## இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவிப்பு

இலங்கை சர்வதேச பாதுகாப்பு மாநாடு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெற வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாவது தடவையாக சர்வதேச பாது காப்பு மாநாடு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம்திகதிகொழும்புதலதாரிஹோட்டலில்தொட ர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் என இரா ணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

64 நாடுகள் இந்த மாநாட்டில் பங்கேற்ற வுள்ளன. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கை எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் பிராந்தியத்தின் ஸ்திரநிலைமை போன்றன குறித்து இம் மாநாட்டில் கவனம் செலுத் தப்படவுள்ளது.

இலங்கைப் படையினரால் வழங்கப்படும் இராணுவப் பயிற்சிகளுக்கு சிறந்த வரவேற்பு காணப்படுவதாக இராணுவத் தளபதி தெரி வித்துள்ளார். (செ-2)

# வெங்கலச் செட்டிக்குள மீள்குடியேற்றத்தில் தமிழ் மக்கள் பலர் புறக்கணிப்பு?

(குருமன்காடு)

வவுனியா வெங்கலச் செட்டிக்குள பிரதே சத்தில் மீளக் குடியமர்ந்தவர்களுக்காக வழங் கப்பட்ட வீட்டு திட்டத்தில் முஸ்லிம் மக்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக செட்டிக்குளம் மீளக்குடியமர்ந்தோர் நலன்பேணும் அமைப் பினரால் வெங்கலச்செட்டிக்குளபிரதேச செய லாள ரிடம் கடந்த 23 ஆம் திகதி கையளிக்கப் பட்டுள்ளது.

வெங்கலச்செட்டிக்குள பிரதேச செயலக பிரிவிற்கு மீளக்குடியமர்ந்தோருக்கான 800 வீட்டுத்திட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ள போதும் பெரும்பான்மையாக வாழும் தமிழ்மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் மக்களுக்கு 650 வீட்டு திட்டம் வழங்கப்பட்ட அதே வேளை தமிழ் மக்களுக்கு வெறும் 150 வீட்டுத் திட்டமே வழங்கப்பட் டுள்ளது.இதில் பல வழிகளிலும் அதிகமாக பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளனர் என அம்மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக மீள் குடியமர்ந்தோர் நலன்பேணும் அமைப்பினை சேர்ந்த நாக முத்து நடராஜா என்பவரை தொடர்பு கொண்ட போது எந்தவிதமான அரசியல் கலப்பும் இன்றி எங்களுக்கும் வீட்டுத்திட்டத்தைத் தரு மாறு நாம் கோரி இம் மனுவை கையளித்துள் ளோம். தொடர்ந்து இப்பிரதேசத்தில் நாம் புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம்.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரி கள் உடனடியாக கவனம் செலுத்தாவிடத்து எதிர்வரும் 30 ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைதியான வழி யில் போராட்டம் நடத்தவுள்ளளோம் எனவும் தெரிவித்தார். (செ-9-250)

# மதுபானசாலைகளுக்கு சந்திரிகா அனுமதிப்பத்திரம் வழங்கியது தவறு!

## அமைச்சர் டலஸ் குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டா ரநாயக்க குமாரதுங்க தனது ஆட்சிக் கால த்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மூன்று மதுபானசாலைகள் மற்றும் 5 பியர் விற்பனை நிலையங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கியது பாரிய தவறு என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித் துள்ளார்.

தென்மாகாண சபை உறுப்பினர் மனோஜ் பியசேனவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 50 பேருக்கு மருத்துவ உதவி களை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறு கையில்,

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 28 வீத ஆண்களும் ஒரு வீதமான பெண்க ளும் மதுபானங்களை அருந்தி வருகின்ற னர். இவர் கள் தமது நாளாந்த வருமானத்தில் 30 வீதத்தை மதுபானங்களுக்காக செலவு செய்கின்றனர்.

சந்திரிகா அன்று 8 மதுபானசாலைகளுக் கான அனுமதிப்பத்திரங்களை வழங்கினார். இதனால் அனைத்து சந்திகளிலும் மதுபான சாலைகள் திறக்கப்பட்டன.அது மிகவும் தவ றான நடவடிக்கை. பானம் என்பது மிகவும் புனி தமான வார்த்தை. திருட்டுத்தனமாக வடிக்கப் படும் சாராயத்திற்கும் மதுபானம் என்ற வார்த் தையை பயன்படுத்துகின்றனர் எனவும் அமைச் சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-2)




ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போய் மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் நாடாளுமன்றத்திற்கு முன்னாள் கடந்த வியாழக்கிழமை சத்தியாக்கிரக போராட்டமொன்று நடத்தப்பட்டது.பீரகீத் எக்னெலிகொடவின் மனைவி மற்றும் மகன் தலைமையிலேயே இந்த போரட்டம் முன்னெடுக்கப்பட்டது.திருமதி அனோமா பொன்சேகா உட்பட பலர் தமது வாய் களில் கறுப்புத்துணியினைக்கட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

# இந்தியாவிற்கு கடத்தப்பட்ட தங்கத் தகடுகள் மீட்பு!

## 150 இலட்சம் ரூபா பெறுமதியானவை

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு கடத்திச் செல்லப்பட்ட சுமார் 150 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தகடுகள் மீட்கப் பட்டுள்ளன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, கொழும்பில் இருந்து சென்ற பயணிகள் விமானம்நேற்று முன்தினம்பிற்பகல்சென்னை வந்தது. விமான நிலைய சுங்கத்துறை அதி காரி கள் பயணிகளின் உடைமைகளை சோதனை செய்தனர். அப்போது கன்வயர் பெல்ட்டில் கவனிப்பாரற்று ஒரு சூட்கேஸ் நீண்ட நேர மாக இருந்தது.

அதில் வெடிகுண்டு இருக்கலாமோ என்ற அச்சம் எழுந்தது. இதையடுத்து விமான நிலைய வெடிகுண்டு நிபுணர்கள் விரைந்து வந்து மோப்பநாய் உதவியுடன் சூட்கேசை சோதனை செய்தனர். அதில் வெடிகுண்டு எதுவும் இல்லை என தெரியவந்தது.

பின்னர் சூட்கேசை சுங்க அதிகாரிகள் திறந்து பார்த்தபோது அதற்குள் ஏராளமான தங்கத் தகடுகள் இருப்பது தெரியவந்தது. மொத்தம் ஒரு கிலோ 700 கிராம் இருந்தது. அதன் சர்வதேச மதிப்பு இந்திய ரூபாயில் 50 இலட்சம் என கூறப்படுகிறது.

சூட்கேசில் கட்டப்பட்டிருந்த டேக் கார்டை வைத்து ஆய்வு செய்தபோது அதைக் கொண்டு வந்த பயணி கொழும்பு நகரை சேர்ந்தவர் என தெரியவந்தது.

இவர் தங்கத்தை கடத்தி வரும்போது சுங்க அதிகாரிகளின் கெடுபிடியான சோதனையை கண்டு சூட்கேசை விட்டு சென்றுள்ளார்.

அவரை பிடிக்க அதிகாரிகள் தீவிர விசார ணையில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக சென் னையில் உள்ள இலங்கை தூதரக அலுவ லகத்தில் குறித்த நபர் தகவல்களை கொடுத் துள்ளனர். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலய

# தேர்த் திருவிழா சிறப்புமலர் 26.01. 2013

## ஆலய வரலாறு

ஈழமணித்திரு நாட்டில் காரைநகர் பயிரிக்கூடல் எனும் இடத்திலே அமைந்து அருளாட்சிபுரியும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் அமைந்துள்ளது. இவ் ஆலயம் ஆரம்பத்தில் கிராம சபைத் தலைவரும் கிராம நீதிமன்றத் தலை வருமாகிய சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவரின் தனி முயற்சியால் இக் கோயில் கட்டப்பட்டது. நித்திய பூசை காலை, மாலை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ் ஆலயத்தில் மஹோற்[illegible]வம் தை மாதத்தில் 10 நாட்களுக்கு ந[illegible]பெற்று தைப் பூசத்துடன் முடிவடையும். ஆரம்ப பூசகராக சுப்பையா ஐயர் குமார சாமி ஐயர் அவருடைய பிள்ளைகள் அமுதேஸ் ஐயர் குடும்பம் தொடர்ந்து பூசைகளை நடத்திக்கொண்டு வந்தன. இடம்பெயர்ந்த காரணமாக நித்திய பூசை சிறிது காலம் நடைபெறாது இருந்து மீண்டும் மீளக்குடியமர்ந்த பின்னர் திருப்பணிகள் நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெற்று நித்தியபூசையும் மஹோற் சவமும் ஆரம்பிக்கப்பட்டன.

இவ் ஆலயத்திலே 2011 ஆம் ஆண்டு இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. பரிவாரமூர்த்திகளாக பிள்ளையார், சண்டேஸ்வரர் போன்றன அமைக்கப் பெற்று வசந்த மண்டபமும் சிறப்பாக அமைக்கப்பெற்று கூரை வேலைகளும் புதிதாக அமைக்கப்பட்டன. கோயிலுக் கென்று ஒரு சிற்பத் தேரும் பெரிய சப்பறமும் நிர்மாணிக்கப்பட்டன. மூன்று தட்டு கோபுரமும் மணி மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

கணபதிப்பிள்ளையைத் தொடர்ந்து அவருடைய தமையனாரான தில்லையம் பலமும் மனைவியும் கோயிலைப் பொறுப்பேற்று நடத்தினார்கள். அவர்களைத் தொடர்ந்து கோயில் பொறுப்பு அவரது மகன் சங்கரப்பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது அவர் சிங்கப்பூரில் வசித்த காரணத்தினால் கோயில் பொறுப்பை சிலகாலம் இளைப்பாறிய அதிபரும் கணபதிப்பிள்ளையின் நெருங்கிய உறவினருமான திரு.எம்.எ.கந்தையா பரி பாலித்து வந்தார்.

தற்போது சங்கரப்பிள்ளை கணபதிப் பிள்ளையின் மூத்த சகோதரி அம்பலவாணர் தெய்வானைப்பிள்ளையின் பேரன் மீண்டும் குடியமர்ந்த பின்னர் இந்தக் கோவிலின் திருப்பணி, நிர்வாகம் போன்ற வற்றை கண்கானித்து வருகின்றார். வெகுகாலத்தில் பல இலட்சம் ரூபா சேகரித்து பல திருப் பணிகள் நடைபெற்று இருக்கின்றன. அவரும் அவருடைய குடும்பமும் பல வருடாங்களாக தேர்த் திரு விழாவை நடத்தி வருகின்றனர்.

இவ் ஆலயத்தில் கடந்த பதினைந்து வருடாங்களாக சிவஸ்ரீ சண்முகராஜக் குருக்கள் மஹோற்சவ குருவாக கடமை யாற்றி வருகின்றார்.

அற்புதக் கீர்த்தி வேண்டின் ஆனந்த வாழ்வு வேண்டின் நற்பொருள் குவிதல் வேண்டின் எல்லாம் வல்ல சுப்பிரமணிய சுவாமியின் திருத்தேர் வடம் பிடித்து இழுத்து அவையாவும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ் வோமாக!

மலரமைப்பு : சீ.ஞானேஸ்வரன்
(அலியன்ஸ் இன்சுரன்ஸ்)

## வரங்களை வாரி வழங்கும் எம்பெருமான்



ஈழமணி நாட்டின் புண்ணிய பூமியாம் காரை நகர் பயிரிக்கூடல் பதியில் விற்றிருந்து வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களை வாரி வழங்குகின்ற அருள்மிகு சிவ சுப்பிரமணிய பெருமானுக்கு இன்று (26.01.2013) இரதோற்சவ உற்சவம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இப்புண்ணிய தினத்திலேயே எனது குரு அருளும் எம் பெருமானின் திருவருளும் இவ்வூர் மக்களுக்கும் பக்தர்களுக்கும் கிடைக்க எம்பெருமானின் திருவடி பணிகின்றேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய
ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள்.

## நம்பியோர்க்கு நல்லருள் புரியும் கருணைத் தெய்வம்

எங்கள் பண்பாட்டின் உயிர்ப்பு மையங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயங்களால் புதுக்கும் ஆராதனைகளின் வழி அனைத்து மனங்களும் மேன்மைப்படுகின்றன. கூட்டு வாழ்வுக்கான விழுமியங்கள் உறுதி பெறுகின்றன.

இந்த வகையில் கல்வி, கலை, ஞானம், தொழில்வளம் பெருக்குடன் நிமிர்ந்துள்ள காரைநகர் பயிரிக்கூடலில் ஆன்மீக அழகுக்கு அழகு சேர்ப்பதாய் சுப்பிரமணிய சுவாமி கோவில் அமைந்துள்ளது. நம்பித் தொழும் அடியவர்களின் மிடியைப் பொடியாக்கி அவர்களுக்கு நல்லருள் புரியும் கருணைத் தெய்வமாக விளங்குகின்றான். கந்தனுக்கு உகந்த காவடியாட்டமும் முருகா முருகா எனும் நாம பஜனையும் கருங்கல்லையும் உருக வைக்கும்.

இவ் ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூஜை வழிபாடுகள் என்றும் சிறப்பாகவும் நடைபெறவும் அடியார்கள் அனைவரும் அவனருள் பெற்று இன்புற்று வாழவும் எம் பெருமானின் இரத பவனி சிறப்பாக நடைபெறவும் எம் குருநாதன் சுப்பிரமணிய சுவாமியின் பொற்பாத கமலங்களை மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.நடராசா
நிதிப் பொறுப்பாளர்


வருவாய் வந்தருள் தருவாய் வேலனே... தேர்த் திருவிழா சிறப்புற பிரார்த்திப்போர்

ஏகாம்பரம்
புடைவை மாளிகை
74 (7), Grand Bazaar, Jaffna.
021 222 2151

Sabare Nathi
(PVT) LTD
No. 866, K.K.S.Road, Jaffna.
0777072106

Kayamukan
Hardware
No.147, 149. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மங்கை
சில்க்ஸ்
No. 15, New Market.
Jaffna.
021 3737587

Kanesan
Stores
201, K.K.S. Road,
Jaffna.
021 222 2830

சீமாட்டி
புடைவைக் கடல்
இல. 122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8564

ஐங்கரன்
ஸ்ரோர்ஸ்
354, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3354

இளவரசி
சேலைச் சோலை
பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்யம்
இல. 57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
021 222 2503

கிங் பெஸன்
Dealers
in Mens Wear
01, Grand Bazaar,
Jaffna.
0775578966

T. சங்கரப்பிள்ளை
அன் சன்ஸ்
21, Modern Market,
Power house Road,
Jaffna.
021 222 9965

இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்ஸ்
பட்டுச் சேலைகளின் சோலைவனம்
இல. 105,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8853

Sivakanesan
Textiles
41, Grand Bazaar,
Jaffna.
021 222 2063

திவ்வியா
ஸ்ரோர்ஸ்
No.163, கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8458

வலம்புரி Graphics சி - 2241


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை பயங்கரவாத ஹெட்லிக்கு 35 ஆண்டு சிறை-அமெ.நீதிமன்றம்

இந்தியாவில் 60 இற்கும் அதிக மானோரை பலி கொண்ட மும்பை தாக்குதல் சம்பவத்தில் செயற்பட்ட டேவிட் கோல்மேன் ஹெட்லிக்கு அமெரிக்க நீதிமன்றம் 35 ஆண்டு சிறை தண்டனை வழங்கி தீர்ப்ப ளித்துள்ளது.

டேவிட் கோல்மேன் ஹெட்லி மும்பை தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு பயிற்சி அளித் தவர் 52 வயதான ஹெட்லி லஷ்கர் இ- தொய்பா இயக்கத்தில் இணை ந்து பல்வேறு பயிற்சிகளை பெற்ற வன் ஆவான்.

2008 ஆம் ஆண்டு மும்பை பயங்கரவாத சம்பவத்தில் தேடப் பட்டு வந்த ஹெட்லி 2009 ஆம் ஆண்டு எப்.பி.ஐ பொலிஸால் அமெரிக்காவில்கைதுசெய்யப்பட்டான். அவன் மீது மும்பை பயங்கரவாத தாக்குதலுக்குள்ளான சதித்திட்டம் தீட்டியது, லஷ்கர்-இ-தொய்பா இயக் கத்துக்கு ஆயுதங்களை விநியோ கித்தமை, மும்பை தாக்குதலின்போது அமெரிக்கர்களை குறிவைத்து கொன் றது உள்ளிட்ட 10 குற்றச்சாட்டுக்கள் சிகாகோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

ஹெட்லியை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என இந்திய அரசு அமெரிக்காவிடம் பலமுறை கேட்டுக்கொண்டது. ஆனால்ஹெட்லி நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூல த்தில் தமக்கு மரணதண்டனை வழங்கக்கூடாது என்றும் இந்தியா-பாகிஸ்தான் அல்லது டென்மார்க் அரசிடம் ஒப்படைக்க கூடாது என் றும் கேட்டுக் கொண்டான்.

அவ்வாறு செய்வதாக உறுதிய ளித்தால் வழக்கு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தருவதாக கூறி னான். இதையடுத்து ஹெட்லியை இந்தியாவிடம் ஒப்படைக்கும் விவ காரத்தில் அமெரிக்கா மௌனம் சாதித்து வந்தது.

இந்நிலையில் ஹெட்லிக்கு சிகாகோ நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி டேவிட் லெய்னன்வெப்பர் 35 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

தீர்ப்பு தினத்தை முன்னிட்டு சிகாகோ நீதிமன்றத்தில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. நீதி மன்றத்துக்கு வந்தவர்கள் அனை வரும் கடும் சோதனைக்கு பின் னரே அனுமதிக்கப்பட்டதோடு தீர் ப்பு வழங்குவதில் 30 நிமிடம் தாம தம் ஏற்பட்டது.

மேலும் மொபைல், ஐபோன் உள்ளிட்ட எலக்ட்ரானிக் பொருட் கள் கொண்டுவர தடை விதிக்கப் பட்டிருந்ததால் பத்திரிகையாளர் கள் சிரமத்துக்கு உள்ளானதாக கூறப்படுகிறது.

இதேவேளை மும்பை தாக்கு தலை மேற்கொண்ட அஜ்மல் கசா ப்பிற்கு கடந்த ஆண்டு இந்தியாவில் மரணதண்டனை நிறைவேற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-5)

# சீனாவில் இறந்த பாட்டி உயிருடன் எழுந்த சம்பவம்

சீனா குவாங்டோங் மாகாண த்தை சேர்ந்த பெங் சியுகுவா என்ற 101 வயது மூதாட்டி உடல்நிலை சரியில்லாமல் இரண்டு வாரங்க ளாக படுக்கையில் கிடந்தார்.

அவரது இரண்டு மகள்களும் அந்த மூதாட்டியை கவனித்துக் கொண்டனர். இந்நிலையில் கட ந்த சனியன்று அவரது உடல் நிலை விறைத்து பேச்சு மூச்சு இல் லாமல் ஆகிவிட்டது.

இதனால் அவர் இறந்துவிட் டார் என்று அவரது குடும்பத்தாரும் உறவினர்களும் அங்கு சடங்கு நிகழ்ச்சிகளை நடத்தினர். பின்னர் மறுநாள் ஞாயிறன்று மதியம் சவப்பெட்டியில் வைப்பதற்காக அவரது உடலை உறவினர்கள் கழுவியிருக்கின்றனர்.

அப்போது அந்த மூதாட்டி தனது கண்களை திறந்து வந்திரு ந்த உறவினர்கள் மற்றும் கிரா மத்தினரை வரவேற்றிருக்கிறார். உடனே கூடியிருந்த அந்த கிராம த்தைச் சேர்ந்த அனைவரும் இறந் துவிட்டதாக நினைத்த பெங் பேசுகி றாரே என்று அதிர்ச்சியில் உறை ந்து போய்விட்டனர். (செ-5)

# முதலைப் பண்ணையொன்றிலிருந்து 15,000 முதலைகள் தப்பிப்பு

தென்னாபிரிக்காவின் முதலைப் பண்ணையொன்றிலிருந்து சுமார் 15 ஆயிரம் முதலைகள் தப்பிச் சென்றுள்ள சம்பவமானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, தென்னாபிரிக்கா வின் வடக்கு பகுதியில் உள்ள லிம் போபோ மாகாணத்தில் தற்போது கடும் மழை பெய்து வருகிறது. இத னால் அங்கு கடும்வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் ரக்வீனா என்ற இடத்தில் உள்ள முதலைப் பண் ணையில் இருந்து 15 ஆயிரம் முதலைகள் தப்பியுள்ளன. இங்கு மழை வெள்ளம் புகுந்ததை தொடர் ந்து அவற்றின் கதவுகள் திறக்கப் பட்டன.

அதைப் பயன்படுத்தி முதலை கள் பண்ணையை விட்டு மழை வெள்ளத்துடன் வெளியேறியுள் ளன. தற்போது அவை பொது மக்க ளுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே அவற்றை தேடிக் கண்டு பிடிக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தப்பித்த முதலைகள் அநேகமாகவற்றை மீட்டுள்ளதா கவும் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை தப்பித்த முதலைகளை தேடும் பணிகளில் இராணுவத்தி னரும் ஈடுபடுத்தபட்டுள்ளனர்.

இவ்வாறுதப்பிச்சென்றஅனைத்து முதலைகளும் நைல் வகையைச் சேர்ந்தவை எனத் தெரிவிக்கப்படுவ தோடு இவை ஆபிரிக்காவில் காணப் படும் மிகப் பெரிய முதலைகள் என வும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-5)

# ஜப்பானில் பூகம்பம்

ஜப்பானில் நேற்று அதிகாலை பூகம்பம் ஏற்பட்டது. இதனால் மக் கள் பீதி அடைந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்தனர்.

ஜப்பானின் நிமுரோ நகரில் இருந்து 22 கி.மீ தென்கிழக்கில் நேற்று அதிகாலை 6.34 மணிக்கு பூகம்பம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 5.2 பதிவானது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

உறக்கத்தில் இருந்த மக்கள் பூகம்பத்தை உணர்ந்து பாதுகாப் பான இடங்களில் தஞ்சம் அடைந் துள்ளனர். இதேவேளை சேத விப ரங்கள் குறித்து உடனடியாக தக வல் வெளியாகவில்லை. (செ-5)



சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற உலக பொருளாதார மாநாட்டின் 43 ஆவது ஆண்டு கூட்டத்தில் லண்டன் பிரதமர் டேவிட் கமரூன் ரஷ்ய பிரதமர் டிமிட்ரி மெட்வதேவைச் சந்தித்து கைலாகு வழங்கு வதைப் படத்தில் காணலாம்.

# ஷிண்டேவை நீக்காவிட்டால் நாடாளுமன்றத்தை முடக்குவோம்

### சுஷ்மா எச்சரிக்கை

பாரதிய ஜனதா கட்சி மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு ஆகியவை இந்து பயங்கரவாதத்தை தூண்டி விடுவதாக பேசிய மத்திய உள் துறை அமைச்சர் சுஷீல் குமார் ஷிண்டேவை பதவி நீக்கக் கோரி டில்லியில் உள்ள ஜந்தர் மந்தர் பகு தியில் நேற்று முன்தினம் போராட் டம் நடத்திய பா.ஜ.க தேசிய தலை வர் ராஜ்நாத்சிங், மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் உள்ளிட்டோர் சுஷீல் குமார் ஷிண்



டேவை பதவியிலிருந்து நீக்காவிட் டால் நாடாளுமன்றத்தை முடக்கு வோம் என எச்சரித்துள்ளார்.

ஆர்.எஸ்.எஸ்,பாரதிய ஜனதா ஆகியவை இந்து பயங்கரவாத முகாம்களை நடத்துவதாக கருத்து தெரிவித்த மத்திய உள்துறை அமைச் சர் சுஷீல்குமார் ஷிண்டேவை கண் டித்து பாரதிய ஜனதா கட்சி சார்பில் நாடெங்கும் நேற்று முன்தினம் ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டது.

அதில் பேசிய ராஜ்நாம் சிங் கூறு கையில், ஷிண்டேவை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தொடர்ந்து வலியு றுத்துவோம். அவரை பிரதமர் நீக் கியே தீர வேண்டும்.

அதுவரை அவருக்கு எதிரான போராட்டத்தை பாரதிய ஜனதா தொடர்ந்து நடத்தும். எந்த சக்தியா லும் ஷிண்டேயைக் காப்பாற்ற முடி யாது. அவரை நீக்காவிட்டால் நாடா ளுமன்றத்தை முடக்குவோம். ஷிண்டே மதத்தின் பெயரால் நாட் டைப் பிளவுபடுத்த முயற்சிக்கிறார் என்றார்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சுஷ்மா பேசுகை யில், இந்திய எல்லைக்குள் இரகசிய முகாம்களை நடத்தும் பாகிஸ்தான் பயங்கரவாதிகள்மீது தாக்குதல் நடத்துவதை விடுத்து இந்தியாவில் முக்கிய எதிர்க்கட்சி மீது அவதூறு பரப்பும் நடவடிக்கையை ஷிண்டே தொடங்கியுள்ளார்.

எல்லையில் இந்திய வீரரின் தலையை துண்டித்த பாகிஸ்தான் படையினரின் செயலை பாரதிய ஜனதா வன்மையாகக் கண்டிக்கிறது.

ஆனால் எங்கள் கட்சிக்குக் களங் கம் கற்பிக்கும் வகையில் உள்துறை அமைச்சர் ஷிண்டே கருத்து வெளி யிட்டுள்ளார். அதற்காக அவரும் பிரதமர் மன்மோகன்சிங், சோனியா காந்தி ஆகியோர் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட அமைச்சர் ஷிண்டேவை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று கூறினார். (செ-5)

# ஐ.நா. ஒப்பந்தத்தை மீறி மியன்மார் இராணுவத்தில் சிறுவர்கள் சேர்ப்பு



(வோஷிங்டன்)

ஐ.நா. ஒப்பந்தத்தை மீறி மியன் மாரில் சிறுவர்கள் இராணுவத்தில் இணைக்கப்படுவதாக மனிதவுரிமை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இதனை தடுக்க ஐ.நா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இது குறித்து ஐ.நா நடத்திய ஆய்வில் மியன்மார் உள்ளிட்ட 24 நாடுகளில் சர்வதேச குழந்தைகள் உரிமைச் சட்டத்தை மீறி குழந்தை களை ஆயுத மோதல்களுக்கு பயன் படுத்தியது தெரியவந்தது.

இதையடுத்து கடந்த ஜூன் மாதம் ஐ.நா. முயற்சியால் ஜனநா யகச் சீர்திருத்தம் மற்றும் சிறுவர்க ளுக்கான பயிற்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒப்பந்தம் கையெழுத் திடப்பட்டது.

அதன் பின்னர் சிறுவர்களை இராணுவத்திற்கு இணைக்கும் ஆட்சேர் ப்பு அறிக்கைகள் குறைந்துள்ளன. மியன்மார் இராணுவத்தில் இருந்து 42 சிறுவர்கள் விடுவிக்கப்பட்டிருக் கின்றனர்.

ஆனால் தற்போது ஒப்பந்தத்தை மீறி மியன்மாரில் குழந்தைகளை ஆயுதப்படையில் சேர்த்து வருவதாக மனித உரிமை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

தெயின்செயின்தலைமையிலான மியன்மார் அரசு ஐ.நாவுடன் இணை ந்து கூட்டு நடவடிக்கை திட்டத்தில் கையெழுத்திட்டு ஜனநாயக சீர்திரு த்தத்தை விரும்புவதாக தன்னைக் காட்டியுள்ளது.

ஆனால் இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையாக நடக்கிறதா என்பதை கண்காணிக்க அதிகாரி கள் தவறிவிட்டனர்.

கடந்த பத்து ஆண்டுகளில் எந்த மாற்றமும் இல்லாமல் ஆட்சேர்ப்பு நடைபெற்று வருவதாக மனித உரிமை அமைப்பு குற் றம் சாட்டியுள்ளது. (செ-2)

# எச்சில் துப்பினால் அபராதம்

புகையிரத நிலையங்களில் அசுத்தம் செய்தால் 500 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்று இந்திய தெற்கு புகையிரத நிர்வா கம் அதிரடியாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தெற்கு புகை யிரத நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழகத்தில் உள்ள புகையிரத நிலையங்கள், அடுக்கு மாடிகள் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் சுத்தம் மற் றும் சுகாதாரத்தை மேம்படுத்த புகையிரத நிர்வாகம் தகுந்த நடவ டிக்கை எடுக்க முன்வந்துள்ளது.

இதன் காரணமாக புகையிரத நிலையங்களில் எச்சில் துப்புவது, குளிப்பது, சிறுநீர் கழித்தல், துணி துவைத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவர்கள் புகையிரத சேவை சட்டப்பிரிவுப்படி 500 ரூபாய் அப ராதம் விதிக்கப்படும்.

மேலும் புகையிரதங்களில் சுவ ரொட்டிகள் ஒட்டுதல் மற்றும் சேதப் படுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுவோர்களுக்கும் இந்தச் சட் டம் பொருந்தும். எனவே பயணி கள் புகையிரத நிலையங்களை சுத்தமாக வைத்திருக்க ஒத்துழைப்ப தர வேண்டும் என குறிப்பிடப்பட் டுள்ளது. (செ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வது வெட்கப்படத்தக்கது அல்ல; தாழ்ந்து கிடப்பது தான் வெட்கப்படத்தக்கது.

-பீச்சர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அவசரமாக நடந்த நாய்களின் மாநாடு

கட்டாக்காலி நாய்களை அழிக்கின்ற நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் என்ற செய்தியை அறிந்த நாய்கள் அவசரமாக மாநாடு ஒன்றை நடத்தின.

மாநாட்டில் வீட்டுநாய்களும் தெருநாய்களும் கலந்து கொண்டிருந்தாலும் தெரு நாய்களே அதிகமாக பங்கேற்றன. உயர்ரக நாய்கள் பகிஷ்கரித்தது போல மாநாட்டில் பங்கேற்கவில்லை.

மாநாட்டிற்கு தலைமை தாங்கிய நாய்க்கூட்டத்தலைவர் கூட்டத்தை ஆரம்பித்தார்.

அன்புக்குரிய எனதருமை சகோதர நாய்களே! மனிதர்களுக்கே நன்றியின் பெருமையை உணர்த்திநிற்கும் என் இனமே எங்கள் குல தெய்வமாகிய வைரவப் பெருமானை ஒரு நிமிடம் வணங்கிக்கொள்வோம் என்றார்.

அடுத்தாக வீதிவிபத்துக்களிலும் நீர் வெறுப்பு நோயினாலும் மரணித்து போன எங்கள் உறவுகளுக்காக மோகன ராகத்தில் அமரக் கீதம் இசைப்போம் என்றார்.

தலைவரின் அறிவிப்பையடுத்து எல்லா நாய்களும் குந்தியிருந்து வானத்தை நோக்கியவாறு ஊளையிட்டு தங்கள் அஞ்சலியை செலுத்திவிட்டு அமர்ந்துகொள்ள, நாய்த்தலைவர் உரையாற்றினார்.

அன்புக்குரிய என்னருமை உறவுகளே! எங்கள் இனத்திற்கு ஆபத்து வந்துவிட்டது. அதிலும் குறிப்பாக தெருக்களில் வாழ்கின்ற எங்கள் இனத்திற்குப் பேராபத்து.

ஊடகங்களில் வந்திருக்கக் கூடிய செய்திகளின்படி, எங்களுக்கு எந்த நேரத்திலும் மரணம் சம்பவிக்கலாம். எனவேதான் இந்த மாநாட்டை அவசரமாகக் கூட்டியுள்ளோம்.

மகிந்த சிந்தனையின் கீழ் எங்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு நன்றிசெலுத்தும் வகையில் எங்களில் பலர் யாழ்ப்பாணத்திலிருந்த இராணுவக் காவலரண்கள் பலவற்றில் கடமையாற்றியுள்ளோம்.

எங்களிடம் இருக்கின்ற அபரிதமான கேட்கும் சக்தியால் மெல்லிய சலசலப்புக்கும் குரல் கொடுத்து படைவீரரை விழிப்படையச் செய்தோம்.

ஆனால் சந்திகளிலிருந்த இராணுவக் காவலரண்கள் குறைக்கப்பட்டதன் காரணமாக நாங்கள் தொழில் இழந்தோம். அதனால் எங்கள் சீவியம் கடினமாகிக் கொண்டது என்பது உண்மைதான்.

அதற்காக தெருநாய்கள் என்ற பேரில் எங்களைப் படுகொலை செய்வதென்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

நாங்கள் விரும்பி தெருவுக்கு வந்தவர்கள் அல்ல. எங்களை எங்கள் எஜமானர்கள் தங்கள் வீடுகளிலிருந்து துரத்திவிட்டனர்.

அதுமட்டுமல்ல எங்கள் இனத்தின் பெண் சிசுக்களை தெருக்களில் வீசிவிட்டு செல்கின்றனர். இதனால் எங்கள் இனத்தைச் சேர்ந்த நாய்க்குட்டிகள் மனிதர்கள் ஓடித்திரியும் வாகனச் சில்லுகளின் மிதிப்புக்கு ஆளாகின்றனர்.

இந்தக்கொடுமை இன்னமும் நீடிக்கின்றது. பெண் நாயை வளர்த்து தமக்குத் தேவையான ஆண் குட்டிகளை எடுத்துக்கொண்டு பெண் குட்டிகளை தெருவில் வீசுகின்ற கொடுமைக்காக மனிதர்களுக்குக் கொடுக்கின்ற தண்டனைதான் என்ன? எங்கள் வழிபடுகடவுள் வைரவரும் இதனை மன்னிப்பாரா?

இவ்வாறு நாய்களின் மாநாட்டில் அதன் தலைவர் ஆக்ரோசமாக உரையாற்றிக் கொண்டிருந்தார்.

(நாளை வரும்)

# அச்சுவேலி, சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையங்கள் அமைச்சர் டக்ளஸால் நேற்று திறந்து வைப்பு

## கூட்டமைப்பின் தலைமையில் இணைந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை-2012 திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட அச்சுவேலி பஸ்தரிப்பு நிலையம், சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையம் என்பன நேற்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வசமுள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட (சுன்னாகம்) சுன்னாகம் பஸ்தரிப்பிடம் 10 மில்லியன் ரூபா செலவிலும் வலிகாமம் கிழக்கு (புத்தூர்) பிரதேச சபைக்குட்பட்ட அச்சுவேலி பஸ்தரிப்பிடம் 5 மில்லியன் ரூபாய் செலவிலும் நிர்மா ணிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் பஸ்தரிப்பிட திறப்பு விழா நேற்று முற்பகல் 11.30 மணியளவில் சபையின் தவி சாளர் தி.பிரகாஷ் தலைமையில் இடம்பெற்றது.

முற்பகல் பத்து மணிக்கு குறித்த பஸ் தரிப்பிடம் திறக்கப்படும் என தவிசாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அமைச்சரின் வருகைக்காக காத்திருந்து 11.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

தவிசாளர் அமைச்சருக்கு மலர் மாலை அணிவித்து கௌரவித்ததோடு அமைச்சரும் தவிசாளருக்கு மலர் மாலை அணிவித்து கௌரவித்தார்.

இதன்போது ஆலய பூஜை இடம் பெற்றது. பூஜை முடிந்தவுடன் மங்கல வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் பஸ்தரிப்பிடத்தை தவிசாளருடன் இணைந்து திறந்து வைத்தார்.

இதன்பின்பு இடம்பெற்ற கூட்டத்தில் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையுரையாற்றினார்.

இதன்போது வேறுபாடு இன்றி பிரதேச அபிவிருத்திக்காக மாகாண சபை நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது எனவும் சபையினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகளுக்கு மாகாண சபையினால் வழங்கப்படும் நிதியுதவியின் மூலம் அபிவிருத்தி திட்டங்களை விரைவாக முன்னெடுக்கமுடிகிறது எனவும் தெரிவித்தார்.

மேலும் மருதனார்மடம் சந்தை, சுன்னாகம் சந்தை என் பன எமது சபைக்கு அதிகளவிலான வருமானத்தை ஈட்டித் தரக் கூடிய மையமாகவுள்ளது. அந்த சந்தைகட்டடத்தொகுதிகளை நவீனமுறையில் அமைத்துக் கொடுப்பதன் மூலம் அதிக வருமானத்தைப் பெற முடியும். எனவே இந்த நிகழ்வுக்கு வருகை தந்துள்ள பிரதம விருந்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

தவிசாளரின் உரையையடுத்து அமைச்சர் உரையாற்றுகையில், இந்த பஸ் தரிப்பிடத்தை யார் திறந்து வைப்பது என்ற சர்ச்சை நிலவியபோதும் தவிசாளரின் கோரிக்கைக்கு இணங்க அவருக்கு மதிப்பளித்து இந்த பஸ்தரிப் பிடத்தை திறந்து வைத்துள்ளேன்.

அத்தோடு இந்தப் பகுதியின் அபிவிருத்தி தொடர்பில் பல கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளார். அவை தொடர்பில் கவனமெடுத்து மிகவிரை வில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். இந்த நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜெயகரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணை பொதுச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம், சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதேசமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதோடு வெடி போட்டும் ஆரவாரப் படுத்தியிரு ந்தனர்.

சுன்னாகம் பஸ்தரிப்பிட திறப்பு விழாவையடுத்து அச்சுவேலி பஸ் தரிப்பிட திறப்பு விழா இடம்பெற்றது.

நண்பகல் 12.30 மணியளவில் இந்தத் திறப்பு விழா நிகழ்வு இடம்பெற்றது. இதற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜெயகரன் தலைமை தாங்கியிருந்தார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் கிழக்கு (புத்தூர்) பிரதேச சபைத்தவிசாளர் பங்கு கொள்ளவில்லை. இந்த பஸ் தரிப்பிடத்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டின் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



## முக்தி

முக்தி என்பது அறிவுள்ளவருக்கே! என்று வேதங்கள் முழங்குகின்றன. புத்திக்கூர்மை என்பது பரிசோதனைகளின் மூலம் அளவிடக்கூடிய ஒன்றா? அது பெற்றோர்களின் அறிவளவைப்பொருத்தா? அப்படியென்றால் பெற்றோர்களையும் குடும்பத்தினரையும் விட அதிக அளவுடைய குழந்தைகளை என்னவென்று கூறுவது? ஒருவரின் அறிவளவைப்பற்றியும் மனதின் இயக்கத்தைப் பற்றியும் நம் நாட்டில் மிகத்தவறான கருத்துள்ளது. உண்மையில் நமது அறிவானது இந்த உலகம் முழுவதும் விரிந்துள்ளது. இந்த அறிவை, அறிவில் சிறந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடில்லாமல் எவ்வயதினராலும் அடையமுடியும்.

இதன்விளைவுகளை உங்களால் முழுமையாக புரிந்துகொள்ள முடிகிறதா? ஒரு சிறுவன் எதை வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் எந்த துறையிலிருந்து வேண்டுமானாலும் விடயங்களைத் தெரிந்துகொள்ளமுடியும். ஒருவர் தன் வாழ்க்கைச்சூழ்நிலைகளின் உள்ளர்த்தத்தையும் அதிலிருந்து மீள்வதற்கான பல்வேறு வழிமுறைகளையும் அதற்காக அவரிடமிருக்கும் திறமைகளையும்கூட அறிய முடியும். இதுதான் மனித அறிவின் ஆற்றல். இன்று நம் எல்லைக்கும் அப்பாற்பட்டது. நாம் உருவாக்கியிருக்கும் அறிவளவைப் பற்றிய தவறான கண்ணோட்டத்திலிருந்து மீண்டு உண்மையை உணர இதுவே சரியான சமயமாகும்.

# மெரோபெனம் திரவ மருந்து பாவனைக்குத்தடை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

இலங்கையில் மெரோபெனம் என்ற திரவ மருந்து வகை பாவனை தடை செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இது குறித்து உடனடியாக சுற்றறிக்கை வெளியிடுமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயதிலக்கவினால் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்கும் வாசனைத் திரவியம் மற் றும் மருந்து கட்டுப்பாட்டு அதிகாரசபை பணிப்பாளருக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மாரவில பொது வைத்தியசாலை யில் மருந்து குப்பி ஒன்றினுள் இருந்து கடந்த 23 ஆம் திகதி இரவு கண்ணாடித் துண்டு கண்டெடுக்கப்பட்டது. மெரோபெனம் 500 மில்லி மீற்றர் திரவ மருந்து குப்பியிலிருந்தே இந்த கண்ணாடித் துண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மெரோபெனம் மருந்துப் பாவனையை சுகாதார அமைச்சு முற்றாக தடை செய்துள்ளது. (2-9)

# சவுதிக்கான இலங்கை தூதுவர் 30 ஆம் திகதி இலங்கை வருகை

(கொழும்பு)

சவுதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவர் அஹமட் ஜவாத்தை எதிர்வரும் 30 ஆம் திகதி இலங்கைக்கு மீள அழைத்துள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

ரிஸானா நபீக்கிற்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமையை தொடர்ந்து சவுதியில் உள்ள இலங்கை தூதுவரை எப்போது இலங்கைக்கு மீளழைக்க போகின்றீர்கள் என எதிர்கட்சியினர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா இவ்வாறு தெரிவித்தார். (செ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## இரண்டுக்கும் வாழ்த்துக்கூறு!



பாமரனைப் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம்.

உற்சாகத்துடன் இருக்க ஆரம்பிப்பதுதான் நீ ஆன்மீக வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறி.

நீ செய்த தவறுகளை வாழ்த்து. அந்தத் தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள். இன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள்.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை. இவை அனைத்திற்கும் மேலாக அன்பு வேண்டும்.

அடுத்தவர்களின் பாதையைப் பின்பற்றக்கூடாது. காரணம் அது அவர்களுடைய பாதை, உன்னுடையது அல்ல. உன்னுடைய பாதையைக் கண்டுபிடித்துவிட்டால் அதன்பின்பு நீ செய்யவேண்டியது எதுவும் இல்லை.

கடவுள் விருப்பு வெறுப்பற்றவர். உலகம், உயிர்கள், அண்டசராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தள்ளாடும் வயதிலும் (101) மரதன் ஓடும் இந்திய வீரர்



*இந்தாண்டுடன் மரதன் ஓட்டப் பந்தயத்தில் இருந்து ஓய்வுபெறப்போவதாக தெரிவித்துள்ளார் 101 வயதுடைய பஞ்சாப் மாநில ஓட்ட வீரர் பவுஜாசிங்.*

இங்கிலாந்தின் இல் போர்டு நகரில் வசித்துவருபவர் பவுஜாசிங். இவர் பஞ்சாப் மாநிலத்தில் 1911 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி பிறந்தார். இங்கிலாந்தில் குடியேறி தொழில் புரிந்து வந்தார். விளையாட்டில் ஆர்வம் கொண்ட இவர் கட்டுப்கோப்பான உடலுடன் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகிறார். இவர் தனது 89 ஆவது வயதில் முதியோருக்கான மரதன் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டார்.

லண்டன், நியூயோர்க், டொரன்டோ நகரங்களில் நடந்த 8 மரதன் பந்தயங்களில் 42 கி.மீ தூரம் ஓடி சாதனை படைத்துள்ளார். கடைசியாக கடந்த ஆண்டு லண்டனில் நடந்த மரதன் போட்டியில் 7 மணி 49 நிமிடங்கள் ஒலிம்பிக் ஜோதியுடன் ஓடி சாதனை படைத்தார்.

தற்போது இந்தியா வந்துள்ள பவுஜாசிங் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள தனது சொந்த ஊருக்கு சென்றார். அங்கு அவர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையில்,

தனக்கு வருகிற ஏப்ரல் முதலாம் திகதியுடன் 102ஆவது வயது பிறக்கிறது.

கடந்த ஆண்டு வரை மரதன் போட்டிகளில் பங்கேற்ற நான் இனி போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். அவரது இளமை இரகசியம் ஆரோக்கியம் பற்றி கேட்டதற்கு, எனக்கு ஒரு போதும் உடல நலக்குறைவு ஏற்பட்டது இல்லை. மருந்து மாத்திரைகளும் சாப்பிட்டது கிடையாது. தினமும் உடற்பயிற்சி செய்வேன்

உணவில் கட்டுப்பாடு வைத்துக்கொண்டேன். நான் சாப்பிடும் உணவு மிகவும் சிறியது. மகிழ்ச்சியும் சந்தோஷமும் என்னை இளமையாகவும், ஆரோக்கியமாகவும் வைதது இருக்கிறது என்று பவுஜாசிங் கூறினார்.

# தோனி இந்திய அணிக்கு கிடைத்த அதிர்ஷ்டம்



இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் பாய்காட் லண்டனில் இருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தோனி இந்திய அணிக்கு கிடைத்த அதிரஷ்டம் எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்த நேர்காணலில் அவர் தெரிவித்தவை வருமாறு.

இந்திய அணியைப் பொறுத்தவரை சுழற்பந்து வீச்சின் தரம் குறைந்து காணப்படுகிறது. அணியின் முதுகெலும்பாக விளங்கிய முக்கிய வீரர்களான ராகுல் டிராவிட்டும், லட்சுமணனும் திடீர் என்று ஓய்வுபெற்றார்கள்.

டெண்டுல்கர் ஓய்வுபெறும் முன் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு ஓட்டங்கள் எடுக்கவில்லை. சமீபத்தில் இங்கிலாந்துக்குக் எதிரான டெஸ்டில் டோனி மிகுந்த சர்ச்சைக்குள்ளானார். என்றாலும் அவரது விளையாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

உண்மையில் டோனி ஒருநாள் போட்டிக்கான தலைசிறந்த அணித்தலைவர் ஆவார். ஒரு அணி வெற்றி பெறும்போது எல்லோரும் தலைவரைப் பாராட்டுகின்றனர். தோல்வியின் போது குறை கூறுகின்றனர்.

ஷேவாக் அதிரடி ஆட்டக்காரர், சிறந்த துடுப்பாட்ட வீரர். ஆனால் அவருக்கு ஓய்வு பெறும் நேரம் நெருங்குவது வருத்தமளிக்கிறது. விராட் கோலி அணியின் சிறந்த இளம் வீரர். அடுத்த தலைவராகும் தகுதி அவருக்கு இருந்தாலும் டோனி போல நிதானமாக யோசித்து செயற்படக்கூடிய தன்மை அவரிடம் கிடையாது. அந்த வகையில் டோனி போன்ற தலைவர் இந்திய அணிக்கு கிடைத்து இருப்பது அதிர்ஷ்டம் தான். இவ்வாறு பாய்காட் கூறினார்.

# விறுவிறுப்பாகத் தொடரும் ஆஸி டெனிஸ்; இறுதிக்குள் நுழைந்தனர் அசரென்கா, ஜோகோவிச்!





அவுஸ்திரேலிய டெனிஸ் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு அசரனகா, ஜோகோவிச் தகுதி பெற்றுள்ளனர்.


அவுஸ்திரேலிய டெனிஸ் தொடர் மெல்பேர்னில் நடைபெற்றுவருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் பெலாரசின் அசரன்கா, அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்டீபன்சை சந்தித்தார். இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய அசரன்கா முதல் செற்றை 6-1 என சுலபமாக வென்றார்.

தொடர்ந்து அசத்திய அசரன்கா இரண்டாவது செற்றை 6-4 என கைப்பற்றினார். இடையில் விலா எலும்பு பகுதியில் காயம் ஏற்பட முதுகு வலியால் அவதிப்பட்டார். இதற்கு சிகிச்சை எடுத்துக் கொள்ள சுமார் 10 நிமிடங்கள் அரங்கை விட்டு அசரன்கா வெளியேறினார். முடிவில், அசரன்கா 6-1, 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் நடப்பு சம்பியன் சேர்பியாவின் நோவாக் ஜோகோவிச், ஸ்பெயினின் டேவிட் பெடரை சந்தித்தார்.

இதில் ஆரம்பம் முதல் அசத்திய ஜோகோவிச் 6-2, 6-2, 6-1 என்ற செற்களில் வென்று இறுதிக்குள் நுழைந்தார்.

# சினிமாவினுள் காலடி வைப்பாரா சச்சின்...?



உலகம் முழுவதும் உள்ள இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் இதயம் கனிந்த அன்பும், பாசமும் தனது கிரிக்கெட் வாழ்வில் மிகப்பெரிய பங்கு வகித்துள்ளதாக சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

பிரபல பின்னணிப் பாடகி ஆஷா போஸ்லே முதன்முதலாக நடிக்கும் "மாய்" என்ற இந்திப் படத்தின் அறிமுக விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

என்னுடைய தந்தை எனக்கு பெரிய அகத்தூண்டுதலாக இருந்தார் என்பதில் சந்தேகமில்லை. பின்பு என் சகோதரர்கள், என் மனைவி மற்றும் மனைவியின் பெற்றோர் ஆகியோர் என் கிரிக்கெட் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகித்தனர். ஒவ்வொரு கட்டத்திலும் சில இலக்குகளை எட்ட வேண்டும், சில விடயங்கள் அதற்கு உங்களுக்கு தாக்கமாக இருக்கும் என்றார்.

இந்திய இசையில் ஆஷாஜி யின் தாக்கம் என்னவென்று அனைவரும் அறிவர். அவரது பாடல்களை கேட்டுத்தான் நான் வளர்ந்தேன் என்றால் மிகையாகாது. எனக்கு பிடித்தமான பாடல் உம்ரோ ஜானில் "ஈன் ஆன்கோ கி மஸ்தி கே" என்ற பாடலாகும்.

சினிமாவில் நடிக்க ஆசையா? என்று கேட்டதற்கு சச்சின், கிரிக்கெட் ஆடும் வரை கிரிக்கெட்தான், ஒரு நேரத்தில் ஒன்றைத்தான் செய்வேன் என்றார் சச்சின்

# T - 20 தரப்படுத்தலில் இலங்கை முதலிடம்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) ரி20 போட்டிகளுக்கான அணிகள் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய தரப்படுத்தலின்படி இலங்கை அணி 127 புள்ளிகளுடன் முதல் இடத்திலும் மேற்கிந்தியத்தீவு 122 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளன. இந்தியா (119) 3 ஆவது இடத்தில் உள்ளது.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் ஷேன் வாட்சன் 798 முதலாவது இடத்திலும் இந்திய வீரர் விராத் கோலி 730 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் பாகிஸ்தானின் சயீத் அஜ்மல் முதலிடத்திலும், அஜந்த மெண்டிஸ் (இலங்கை), கிரீம் ஸ்வான் (இங்கிலாந்து) அடுத்த இடங்களிலும் உள்ளனர்.


# இந்திய - இங்கிலாந்து இறுதிப்போட்டி நாளை

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இறுதி ஒரு நாள் போட்டி இமாச்சலபிரதேச மாநிலம் தர்மசாலாவில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளது.

இந்த போட்டியில் பங்கேற்பதற்காக இந்தியா, இங்கிலாந்து வீரர்கள் நேற்று தர்மசாலா வந்து சேர்ந்தனர். மலைவாசஸ்தலமான தர்மசாலா கடல்மட்டத்தில் இருந்து 1317 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. இங்கு சர்வதேச கிரிக்கெட் போட்டி நடைபெறுவது இதுவே முதல் முறையாகும்.

போட்டி நடக்கும் அன்றைய நாள் இந்த சிறிய மலைநகரத்திற்கு வரலாற்று சிறப்பு வாய்ந்த நாளாக அமையப் போகிறது என்று இமாச்சலபிரதேச கிரிக்கெட் சங்க தலைவர் அனுராக் தாகூர் தெரிவித்தார். மலையில் பனிப்பொழிவு கடுமையாக இருக்கும் என்பதால் இந்த ஆட்டம் காலை 9 மணிக்கு தொடங்குகிறது.

# அண்மைய நிகழ்வுகள் அனைத்தையும் வீணடித்துவிட்டன – பி.சி.பி தலைவர்




இந்திய அணியின் பாகிஸ்தான் பயணம் ஏறக்குறைய முடிவாகியிருந்தது. இறுதியில் எல்லாமே வீணாகிப் போனது என, பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.பி.,) தலைவர் ஜக்கா அஷ்ரப் கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2008 மும்பை பயங்கரவாத தாக்குதலுக்குப் பின், இந்தியா, பாகிஸ்தான் அணிகளின் கிரிக்கெட் தொடர் சமீபத்தில் நடைபெற்றது.

அப்போது, இந்திய அணி பாகிஸ்தான் வரவேண்டும் என, பி.சி.பி., சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இத்தொடர் முடிந்த சில நாளில், காஷ்மீர் எல்லைப்பகுதியில் இந்திய இராணுவத்தினர் இருவர் கொடூரமாக கொல்லப்பட்டனர். இதனால், இரு நாடுகள் இடையிலான உறவில் மீண்டும் விரிசல் ஏற்பட்டது.

இதுகுறித்து ஜக்கா அஷ்ரப் கூறியது:

இந்தியாவில் போட்டிகளில் பங்கேற்றபோது இந்திய கிரிக்கெட் சபையுடன் (பி.சி.சி.ஐ.,) மட்டுமன்றி, இந்திய அரசு அதிகாரிகளிடமும் பலசுற்று பேச்சுவார்த்தை நடத்தினோம். இந்திய அணி பாகிஸ்தான் வருவது ஏறக்குறைய முடிவானது. ஆனால், அண்மைக்கால மோசமான நிகழ்வுகள் அனைத்தையும் வீணடித்துவிட்டன. இவ்வாறு ஜக்கா அஷ்ரப் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து பிரெட் ஹொட்ஜ் புதிய சாதனை

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் பிரட் ஹொட்ஜ் இருபது-20 அரங்கில் 5 ஆயிரம் ஓட்டங்கள் எடுத்த முதல் வீரர் என்ற புதிய வரலாறு படைத்தார்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர், பிரட் ஹொட்ஜ், கடந்த 2008-ல் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்த ஓய்வை அறிவித்தார். தற்போது பங்களாதேஷ் பிறிமியர் லீக் (பி.பி.எல்) தொடரில், பாரிசால் பர்னர்ஸ் அணியின் தலைவராக உள்ளார்.

நேற்று முன்தினம் சிட்டாகொங் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 34 ஓட்டங்களை எடுத்த இவர், 25 ஆவது ஓட்டங்களைக் கடந்த போது, இருபது-20 அரங்கில் 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற புதிய சாதனையைப் படைத்தார்.

இதுவரை இவர், 171 இருபது-20 போட்டியில் 2 சதம், 34 அரைச்சதம் உட்பட 5 ஆயிரத்து 9 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதில் 8 முறை அவுஸ்திரேலியாவுக்காக சர்வதேச இருபது-20 போட்டியில் விளையாடியுள்ளார்.

38 வயதான இவர், அவுஸ்திரேலிய ஏ, விக்ரோரியா, ஆக்லாந்து, நோர்தன் டிஸ்டிரிக்ட்ஸ், லங்காஷயர், லீசெஸ்டர்ஷயர், துர்ஹாம், பாரிசால் பார்னர்ஸ், கொச்சி டஸ்கேர்ஸ் கேரளா, கொல்கத்தா நைட் ரைடர்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ், மெல்பேர்ன் ரெனிகேட்ஸ், பாஸ்னாஹிரா கிரிக்கெட் டன்டீ உட்பட 13 அணிகளுக்காக உள்ளூர் இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இவரை அடுத்து, மற்றொரு அவுஸ்திரேலிய வீரர் டேவிட் ஹசி, 198 போட்டிகளில் 4821ஓட்டங்கள்எடுத்து, 2-வது இடத்தில்உள்ளார்.

## நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் சம்பியன்

(நெல்லியடி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகளின் இறுதி மற்றும் 3-ம் இடத்திற்கான போட்டிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியினை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

தொடர்ந்து 2-வது பாதி ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்திய அவ்வணி மேலும் ஒரு கோல் போட்டு வெற்றியினை உறுதி செய்தது.

இறுதியில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் வலயச் சம்பியனாகியது.

3-ம் இடத்திற்கான போட்டியில் இமையாணன் ஜி.ரி.எம்.எஸ் அணியினை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது. அபாரமாக ஆடிய இமையாணன் ஜி.ரி.எம்.எஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி நவஜீவன், ஞானமுருகன் வெற்றி

யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் ஞானமுருகன் அணியும் வெற்றி பெற்றன.

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியினை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மேற்படி போட்டிகளில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழக அணிக்கும், உடுப்பிட்டி நவஜீவன் அணிக்குமிடையில் நடைபெற்றது. இதில் உடுப்பிட்டி நவஜீவன் அணி 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் பி அணியினை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதிய போட்டியில், ஞானமுருகன் அணி 13:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றியீட்டியது.

# கொக்குவில் இந்துக் கல்லூரியை வீழ்த்தி சென்.ஜோன்ஸ் கல்லூரி அபார வெற்றி

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட 19 வயதுப் பிரிவு பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கிடையில் மட்டுப்படுத்தப்படாத பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட இரண்டு நாள் கிரிக்கெட் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி தமது முதல் இன்னிங்ஸில் 28.4 பந்து பரிமாற்றங்களை எதிர்கொண்டு அனைத்து இலக்குகளையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அனோஜன், கவாஸ்கர் தலா 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் கொக்குவில் இந்து சார்பாக சிலோஜன், பங்குஜன் தலா 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இன்னிங்ஸினை துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 31.3 பந்து பரிமாற்றங்களை எதிர்கொண்டு 75 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக லோகதீஸ்வரன், கானா அமிர்தன் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

6 ஓட்டங்கள் முன்னிலையில் தமது 2-வது இன்னிங்ஸினை துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 59.4 பந்து பரிமாற்றங்களை எதிர்கொண்டு அனைத்து இலக்குகளையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் துவாரகசீலன், அமிஜயன், கபில்ராஜ் முறையே 55, 40, 33 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக பவிகரன் 6 இலக்குகளையும் கைப்பற்றினர்.

167 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் தமது 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 30.5 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டு 79 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 87 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் சத்தியன் 27 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக லோகதீசன், கானா அமிர்தன் ஆகியோர் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

## யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் 13 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடை[illegible]ன 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட[illegible]டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டிகள் தற்போது தேசிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் மின்னேரியா நயாளகந்த நவோதயா மகா வித்தியாலய அணியினை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய்தது.

அதற்கிணங்க களமிறங்கிய நயாளகந்த நவோதயா அணி 30.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக அஸங்க 27, கவிந்த 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக மதுசன், அன்டர்ஸன் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

107 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 26.2 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் மதுசன் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும், தனுஜன் 16 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நயாளகந்த நவோதய அணி சார்பாக துமிந்த 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

## வருடாந்த ஹொக்கி பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கே.குலரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இப்பொதுக்கூட்டத்தில் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள்ளதுடன் ஹொக்கிச் சங்கத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

## கிரிக்கெட் இறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை 3.30 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ணா வீதியில் அமைந்துள்ள கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

காட்சி ஆட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியும் பொற்பதி இந்து விளையாட்டு கழக அணியும்,

இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் மானிப்பாய் ஒக்ஸ்போட் கிங்ஸ் அணியும் மோதவுள்ளன.

## தேக்கங்காட்டுப் பகுதியில் மின்சாரம் தடைப்படும்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மின்சார திருத்தவேலைகள் இடம்பெறுவதன் காரணமாக இன்று காலை 11மணியில் இருந்து மாலை 5 மணிவரை முள்ளியவளை தேக்கங்காட்டு பகுதியில்இருந்து முள்ளியவளை வற்றாப்பளை பிரதேசம், முல்லைத்தீவு பட்டினப்பிரதேசங்களில்மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என முல்லைத்தீவுமாவட்டமின் அத்தியட்சகர்ப.[illegible]தில் செல்வன் அறிவித்துள்ளார். (செ-[illegible])

## சாரதி பயிற்சியாளர்களுக்கு பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள சகல சாரதி பயிற்சிப் பாடசாலைகளிலும் பணியாற்றும் அனைத்து பயிற்றுவிப்பாளர்களுக்குமான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தலைமைச் செயலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சாரதி பயிற்சிப் பாடசாலைகளின் பயிற்றுவிப்பாளர்களுக்கான இக் கருத்தரங்கில் தலைமைச் செயலக உயரதிகாரிகளும் கலந்துகொள்ள உள்ளதால், வட மாகாணத்தில் உள்ள சகல சாரதி பயிற்சிப் பாடசாலைகளிலும் பணியாற்றும் அனைத்துப் பயிற்றுவிப்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள மோட்டார் வாகன பரிசோதகர் தெரிவித்துள்ளார். (செ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை வீழ்த்தும் சூழ்ச்சியே சிறிதரன் மீதான பழிவாங்கல்

## கண்டிக்கிறார் யோகேஸ்வரன் எம்.பி

கிளிநொச்சியில் சிறிதரன் எம்.பி. மீது மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்கு முறையை வன்மையாக கண்டிப்பதாக கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் அலுவலகத்தில் திடீரென அரச படையினரும் புலனாய்வுப் பிரிவினரும் புகுந்து சில பொருட்களை கைப்பற்றியதாக கூறி சக பாராளுமன்ற உறுப்பினரையும் அவரது உத்தியோத்தர்களையும் வேதனைப்படுத்தும் நிகழ்வில் சூழ்ச்சி உள்ளதாகவும், இது பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மீதும் அவரது உத்தியோகத்தர் மீதும்மேற்கொள்ளப்படும் அடக்குமுறை எனவும் இதற்கு தமது வன்மையாக கண்டனத்தை தெரிவிப்பதாகவும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புபின் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் தனது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மையில் இவரது அலுவலக பொலிஸ் உத்தியோகத்தரை அரசாங்கம் நீக்கிக் கொண்ட பின் இச் செயற்பாட்டை மேற் கொண்டுள்ளது. இதற்கு பின்னணியில் அரசாங்கத்துடன் இணைந்துள்ள ஒட்டுக்குழுக்கள் உள்ளமையை தெளிவாக உணரமுடிகிறது.

இன்று பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனை அடக்கிவிட்டதாக அரசாங்கப் படையினரோ, அரசாங்க புலனாய்வுபிரிவினரோ :அரசுடன்இயங்கும்ஒட்டுக்குழுக்களோகருதலாம். ஆனால் இவை இந்த நாட்டின் ஜனநாயகத்தை எவ்வாறு அரசாங்கம் குழிதோண்டி புதைக்கின்றது என்பதையே சர்வதேசத்துக்கு காட்டி நிற்கிறது.

மக்களுக்காக பெரும் பணி புரியும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனை சர்வதேச சமூகமும் நன்கு அறியும்.அவர் மீது பூசப்படும் இச்சேறு பற்றியும், இதன் திட்டமிடல் பற்றியும் அவர்கள் அறிந்திருப்பார்கள் என நான் நம்புகிறேன்.

இவ்வாறான நடவடிக்கை மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பை அரசு அடக்க முற்படுவது முட்டாள்தனமான செயல் என்பதை இங்கு சுட்டிக்காட்டுகின்றேன்.

எனவே இவ் வரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மீதும் அவரது உத்தியோத்தர் மீதும் மேற்கொள்ளும் முறையற்ற இச்செயற்பாடுகளை நிறுத்த முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன் என தனது கண்டனஅறிக்கையில்மேலும்தெரிவித்தார்.(செ-11)

## பேரா.பாலசுந்தரம்பிள்ளை நியமனம்

பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை வட மாகாணப் பிராந்திய திட்டமிடல் குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனத்தினை கடந்த டிசம்பர் மாதம் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் மற்றும் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சு வழங்கியுள்ளது. இவரது பதவிக் காலம் மூன்று வருடங்களாகும் .

இலங்கையில் முதலாவதாக யாழ் பல்கலைக்கழகத்தில் சமுதாய பிராந்திய திட்டமிடல் கற்கைநெறியினை பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை பத்து வருடங்களுக்கு முன்பே ஆரம்பித்து வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## டாக்டர் பேரின்பநாதன் நூல் வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

பிரபல எழுத்தாளர் டாக்டர் ஆ.பேரின்பநாதன் எழுதிய, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் மதுவும் அடிமை நிலையும் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ந)

## கடந்த வாரம் திருட்டில் பறிபோனது பல இலட்சம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வாரத்தில் பத்திற்கும் மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்களில் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் பணம் என்பன திருட்டுப்போய் உள்ளன. இக்கொள்ளைச்சம்பவங்கள் பெரும்பாலும் வீடு உடைத்தே மேற்கொள்ளப்பட்டு உள்ளன எனவும் யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

எனினும் இந்த 10 இற்கும் மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்களில் இரண்டுடன் தொடர்புடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஏனைய 8 சம்பவங்கள் தொடர்பில் தாம் புலனாய்வு விசாரணைகள் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார். (செ-4)

## அமெரிக்க இராஜதந்...

அறிவித்துள்ளது.

இதேவேளை ஊடகத்துறையின் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் மாநாட்டில் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல கூறுகையில்,

அமெரிக்க பிரதிநிதிகள் வரலாம் போகலாம். அதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை அவர்கள் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக அறிகிறேன்.

அந்த பேச்சுவார்த்தையின்போது கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரிந்துரைகளை அமுல்படுத்தல், பாதுகாப்பு தரப்பினரின் செயற்பாடுகள் உள்ளிட்ட விபரங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவர் என்றார். (செ-11)

## இலங்கை மீதான அமெரிக்காவின்...

இவ்வாறானதொரு அமெரிக்காவின் பயிற்சி நெறிக்கு அரசாங்கம் பரிந்துரைத்த மூத்த படை அதிகாரிகளின் பெயர்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள அமெரிக்க குழுவுடன் கலந்துரையாடவுள்ளேன்.

இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்ளவேண்டும் என அமெரிக்கத் தரப்பினர் கூறியிருந்தமைக்கு மாறாகவே அந்நாடு செயற்பட்டு வருகிறது.

பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்காவால் எடுக்கப்பட்ட முடிபால் பாதிக்கப்பட்ட முன்னாள் புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்க விவகாரம் இதற்கு நல்லதொரு உதாரணம்.

இறுதிக்கட்டப் போரின்போது படைத்தரப்பின் 53வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக பணியாற்றினார் என்ற அடிப்படையிலேயே மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்கவின் பெயர் நிராகரிக்கப்பட்டது.

ஆனால் போர் முடிவுக்கு வந்த பின்னரே அவர் 53வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக பொறுப்பேற்றிருந்தார்.

இலங்கை படைத்தரப்பைச் சேர்ந்த 2,800 பேருக்கு இந்தியாவும், 1,000 பேருக்கு பாகிஸ்தானும் பயிற்சிகளை வழங்கிவருகின்றன.

இலங்கை படைத்தரப்பைச் சேர்ந்த பலருக்கு பயிற்சிகளை வழங்க சீனாவும் முன்வந்துள்ளது.

இந்த நிலையில், எமது படைத்தரப்பினருக்கு பயிற்சிகளை வழங்க அமெரிக்கா மறுத்தால் படைத்தரப்பினர் பயிற்சிகளைப் பெற சீனா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கே செல்ல வேண்டும் என கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை படைத்தரப்பைச் சேர்ந்த 200 அதிகாரிகள் அமெரிக்காவில் தற்போது குறுகிய காலப் பயிற்சிகளை பெற்று வருவதாக இலங்கை படையதிகாரிகளை மேற்கோள்காட்டி ஏ.எவ்.பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (செ-11)

## அரச இணைய...

என்ற ஊடுருவல்காரரால், இலங்கை அரசின் இணையத் தளங்களை முடக்கும் போர் நடத்தப்பட்டு வருகிறது.

அதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் ரவி ஜோன்ஸ் எனப்படும் இணைய ஊடுருவல்காரரால் தாமரைத்தடாகம் அரங்கின் இணையமும் முடக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இலங்கை அரச இணையத்தளங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த மறைமுகப்போர் தீவிரமடைந்து வருகின்றது.

ஏற்கெனவே இலங்கை தேசிய பாதுகாப்பு ஊடக தகவல் மையத்தின் இணையத்தளம், இலங்கை துறைமுக அதிகாரசபை, வெளிநாட்டுவேலைவாய்ப்பு பணியகம், ரூபவாஹினி தொலைக்காட்சி உட்பட இரண்டு அரச தொலைக் காட்சிகளினதும் இணையத்தளங்களும் முடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ -11)

## கடலில் மூழ்கி...

ஆழமான கடலுக்குள் படகில் இருந்து வீழ்ந்த குறித்த இளைஞன் மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து கடலில் இருந்து சடலமாக மீட்கப்பட இளைஞனின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(செ -4)

## சல்மான்...

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை அண்மைக் காலமாக கடுமையாக விமர்சித்துவரும் சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பை மேற்கொண்டாரா? என்பது தெளிவாகவில்லை.

எனினும், ஆட்சியில் இல்லாத முன்னாள் இலங்கை ஜனாதிபதியுடன், இரு தரப்பு விவகாரங்கள் குறித்து இந்திய வெளி விவகார அமைச்சர் பேசியிருக்க வாய்ப்பில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் சந்திப்பை அடுத்து இடம்பெற்றுள்ள சந்திரிகாவுடனான இந்தச் சந்திப்பு முக்கியமானதொன்றாக இருக்கலாம் என்று புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன. (செ-11)

## ரிசானா வாழ்ந்த...

நபீக் வாழ்ந்த குடிசையை உடைக்காமல் இந்த வீட்டைக்கட்டுமாறு ரிசானாவின் தாயார் கேட்டுக்கொண்டுள்ளார். (செ-11)

## பாம்பு மழை...

தில் நின்றுகொண்டிருந்தபோது மழையுடன் சேர்ந்து இரண்டு பாம்புகள் வந்து விழுந்ததாகவும் அதில் ஒரு பாம்பு தனது தோள் மீது விழுந்து ஓடியதாகவும் ஜன்னத் மாவத்தையில் வசிக்கும் பெண்ணொருவர் கூறினார்.

இப் பாம்புகள் எந்த இனத்தைச் சேர்ந்த பாம்புகளென்பது பற்றி தங்களுக்குத் தெரியாது எனவும் பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர். (செ-11)

## கழிவு எண்ணெய் தாக்கு...

கையெழுத்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு இருந்தது.

இக் கையெழுத்து போராட்டத்தின்போது போராட்டத்தில் வந்து கொண்டிருந்த போராட்டக்காரர்கள் மீதும் செய்தி சேகரிக்க அங்கு சென்றிருந்த செய்தியாளர்கள் மீதும் கழிவு எண்ணெய் இனந்தெரியாதோரால் வீசப்பட்டது.

இக்கழிவு எண்ணெய் வீச்சுச் சம்பவம் யாழ். நகரில் பலர் முன்னிலையில் நிகழ்த்தப்பட்டு உள்ளதோடு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பொலிஸ் காவல் நிலையத்திற்கு மிகக் குறுகிய இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் ஏதும் நடவடிக்கை எடுத்துள்ளனரா? யாராவது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா? என நேற்றைய தினம் அவரது அலுவகத்தில் இடம்பெற்ற வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பில் யாழ்.ஊடகவியலாளர் ஒருவரினால் கேள்வி ஒன்று தொடுக்கப்பட்டது.

இக்கேள்விக்கு எரிக் பெரேரா பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய தமிழ் கட்சிகள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட இருந்தால் அது தொடர்பில் பொலிஸாரிடம் முன்கூட்டியே அனுமதி பெற்று விடுகின்றனர்.

இதனால் அவர்களது ஆர்ப்பாட்டங்களில் பொலிஸ் ரோந்துப் பணிகள் இடப்பட்டு அசம்பாவிதங்கள் எவையும் இடம்பெறாமல் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனினும் நீங்கள் குறிப்பிட்ட அரசியல் கட்சியானது பொலிசாருக்கு எவ்வித அறிவிப்பு இன்றி யாழ்.பஸ் நிலையத்தில் திடீர் என போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தது.

இதனால் பொலிஸாருக்கு குறித்த போராட்டம் தொடர்பில் தெரியாமலேயே போயிற்று. கழிவு எண்ணெய் வீச்சும் இடம்பெற்றுள்ளது. யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் தான் எமக்கு இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றது என தெரியவந்ததாக அவர் கூறினார்.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்களின்போது செய்தியாளர்கள் மீது கழிவு எண்ணெய் வீச்சு இடம்பெறுகின்றதே, அதற்கு பொலிஸார் எவ்விதமான நடவடிக்கை எடுக்கப்போகின்றனர் எனக் கேட்டபோது,

ஆர்ப்பாட்டங்களின் போது செய்தி சேகரிக்க செல்லும் ஊடகவியலாளர்கள் தூர இடங்களில்நின்று கொண்டு தமது வேலையினைச் செய்யுமாறு அவர் அறிவுரை வழங்கினார்.

எதுவாயினும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களில் இனிவரும் காலங்களில் அசம்பாவிதங்கள் இடம்பெறாமல் பொலிஸார் பார்த்துக்கொள்வார்கள் எனவும் அவர் உறுதியளித்தார்.

எனினும் சமவுரிமை இயக்கதினரால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பொலிஸாரின் பிரசன்னம் ஆரம்பத்திலே இருந்தது எனவும் அதற்கான ஆதாரம் தன்னிடம் இருப்பதாகவும் யாழ் .ஊடகவியலாளர் ஒருவர் சுட்டிக்காட்டியிருந்தார். (செ-4)

வவுனியா நகரில்..........

**Diploma in Mass Media**

அறிவிப்பாளர் பயிற்சி

(2-வது பிரிவு 14 மாணவர்களுடன் வெற்றிகரமாக நிறைவு பெற்றதைத் தொடர்ந்து 3-வது பிரிவு ஆரம்பம்)

10-02-2013 யாழில்

11-02-2013 வவுனியாவில்

வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா! இதோ.....

வட மாகாணத்தில் (திறமையின்தேடல்) ஊடகத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலை சிறந்த அறிவிப்பாளராக உருவாக்கி வரும் வவுனியா Sun British College பெருமையுடன் அறிமுகப்படுத்தும் யாழ் மற்றும் வவுனியா மாணவர்களுக்கான அறிவிப்பாளர் பயிற்சிநெறி

(Diploma in Mass Media)

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத் தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல.

(பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 05 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்றும் சந்தர்ப்பம்)

இலங்கையிலும், சர்வதேசத்திலும் துடிப்பு மிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக, ஊடகவியலாளராக வேண்டுமா?...

தயாராகுங்கள்... பதிவுகளுக்கு விரையுங்கள்..

வவுனியா, முல்லைத்தீவு மாணவர்கள்
Sun British College
No.26, Station Road, vavuniya.
T.P:0777 929475, 0242226649

கிளிநொச்சி, யாழ்.மாணவர்கள்
IISEEES NALLUR CAMPUS
No.72, Pointpedro Road, Nallur, Jaffna.
T.P:0777929475 , 0212224728

குறிப்பு: எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச, தனியார் வானொலி, தொலைக்காட்சியில் அறிவிப்பாளராகக் கடமையாற்றுகின்றனர்.

(1581)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org